பக்கங்கள் : 12+16=28

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 28 திங்கட்கிழமை (13-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:293

## நல்லூர் சிறப்பிதழ்

நல்லைக்கந்தன் ரதோற்சவ சிறப்பு மலர் 8 வர்ணப் பக்கங்கள் உட்பட 16 பக்கங்களுடன் தனி இணைப்பாக இன்றைய உதயனுடன் வெளிவருகின்றது. வாசகர்கள் தவறாது கேட்டு வாங்குங்கள்!

# ஐ.தே.கவின் விருப்பப்படியே இ.தொ.கா. 'பல்டி' அடித்தது!

## எஸ்.பி. திஸாநாயக்கா கூறுகிறார் தொண்டா தங்களுடன்தானாம்

கொழும்பு,செப்ரெம்பர்13

ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பத்துக்கு அமையவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அரசுக்கு ஆதரவு வழங்கியது. இ.தொ.கா., அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்தாலும் தொண்டமான் எம்முடனேயே (எதிர்த்தரப்பினருடனேயே) அமர்ந்து இருப்பார். தக்க சமயத்தில் எமக்கு அவர் ஆதரவு நல்குவார். இனி வரும் தேர்தல்களிலும் அவர் எம்முடன் இணைந்தே போட்டியிடுவார்.


- இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் அமைச்சரும் ஐ.தே. கட்சியின் உயர்தலைவர்களுள் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்கா.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் இ.தொ.கா., அரசுக்கு முட்டுக்கொடுத்துள்ளதை நாம் வரவேற்கின்றோம்.

எமது ஆலோசனையுடனேயே அவரது

(12ஆம் பக்கம் பார்க்க)



## நல்லைக் கந்தன் இன்று தேரில் எழுந்தருள்கிறார்

யாழ்ப்பாணம்,செப்.13

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் தேர் உற்சவம் இன்று காலை நடைபெறுகின்றது.

விசேட பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து இன்று காலை 7.30 மணிக்கு (பழைய நேரம் 7மணி) ஆறுமுகசுவாமி தேரில் எழுந்தருளுவார்.

ஆலயத்தில் அதிகாலை 4.30 மணிமுதல் விசேட பூசைகள் இடம்பெறும். காலை 6.15 மணிக்கு வசந்த மண்டபத்தில் சுவாமிக்கு பூசை இடம்பெறும். தொடர்ந்து 7.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.

கந்தனின் தேர்த்திருவிழா காண பல லட்சக்கணக்கான அடியார்கள் இன்று ஆலயத்தில் திரள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், புலம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. தனிவழியே போகும் புத்திரசிகாமணி கூறுகின்றார்

கொழும்பு,செப்.13

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஏற்கவோ, அங்கீகரிக்கவோ இல்லை.

அதேபோன்று இ.தொ.கவை ஜே.வி.பியும் கட்டுப்படுத்தமுடியாது.

- இப்படி அடித்துக்கூறுகிறார் இ.தொ.காவின் நிர்வாகச் செயலாளரும் எம்.பியுமான வீ. புத்திரசிகாமணி.

எங்களது கட்சி (இ.தொ.கா.) சுதந்திரமானது. சுயாதீனமாக இயங்குவது. எங்கள் மீது யாரும் அதிகாரம் செலுத்தவோ, காட்டவோ முடியாது.

பொ.ஐ.முன்னணியோ, ஜே.வி.பியோ எதைச் சேர்ந்தவர்கள் கூறுவதையும் நாம் கேட்கப் போவதில்லை. எமது கட்சி தானாகவே - சுயாதீனமாகவே - முடிவுகளை எடுக்கும் - என்றார் புத்திரசிகாமணி.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் ஆலயச் சூழலில் பெரும் வாகன நெரிசல்

### நேற்றுமாலை போக்குவரத்துகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,செப்.13

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந் திருவிழாவின் சப்பரத் திருவிழாவான நேற்று மாலை ஆலயச் சூழலில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

குடாநாட்டின் நாலா புறங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வாகனங்களில் ஆலயம் நோக்கி வந்ததால் இந்த நெரிசல் ஏற்பட்டது. ஆலயத்தை நோக்கி வரும் சகல வீதிகளிலும் வீதித் தடைகளுக்கு வெளியே வீதியோரமாக வாகனங்கள் கண்டபடி நிறுத்திவைக்கப்பட்டதால் வீதிகளில் போக்குவரத்து பலமணி நேரம் தடைப்பட்டது. ஆலயத்துக்குக் கால் நடையாக வந்த பக்தர்களும் ஆலயத்தில் இருந்து திரும்பிய பக்தர்களும் வீதித்தடைகளைத் தாண்டிச் செல்ல முடியாது பெரும் அவதிப்பட்டதைக் காண முடிந்தது. வீதிகள் எங்கும் கண்டபடி வாகனங்கள் தரிக்கவிடப்பட்டிருந்தன.

போக்குவரத்துப் பொலீஸாரும் ஒழுங்கு பேணும் தொண்டர்களும் பகீரதப் பிரயத்தனம் செய்தபோதிலும் வாகன நெரிசலைத் தவிர்த்துப் போக்குவரத்தை இலகுவாக்க முடியவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து புலிகளின் தளபதிகள் ஹெலியில் மட்டக்களப்பு திரும்பினர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடனான சந்திப்பிற்காக வன்னிக்குச் சென்றிருந்த புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத் தளபதிகள் நேற்று முற்பகல் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் மூலம் மட்டக்களப்பு திரும்பியுள்ளார்கள்.

கடந்த 3ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் இவர்கள் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்கள்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து தலைமைப்பீடத்துடன் பல்வேறு சந்திப்புக்களின்போது இவர்கள் ஆராய்ந்துள்ளார்கள்.

புலிகளின் பிராந்திய சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ், மட்டக்களப்பு மாவட்டத் தளபதி ராம், அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தன், ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயாத்தன் ஆகியோரே மட்டக்களப்பு திரும்பியுள்ளனர்.

பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தொடர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருக்கின்றார்.

நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம தபாலகம் மக்கள் சேவைக்கு!

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்நகரில் கோட்டைப் பகுதியில் மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள யாழ்.பிரதம தபாலகம் நாளைமறுதினம் புதன்கிழமைமுதல் பொதுமக்கள் பாவனைக்குத் திறக்கப்படவுள்ளது.

வைபவரீதியான நிகழ்வுகள் எதுவும் இன்றியே தபாலகம் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்படும்.

கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்ததையடுத்து கட்டடத் திணைக்களம் அதனைத் தபால் திணைக்களத்திடம் நேற்றுமுன்தினம் கையளித்தது. அதைத் தொடர்ந்து தபாலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இணைந்து பால் காய்ச்சிப் பொங்கல் பொங்கி சமயக் கிரியைகளை நிறைவேற்றினர்.

தற்சமயம் ஸ்ரான்லி வீதியில் இயங்கும் பிரதம தபாலகம் நாளைமறுதினம்முதல் புதிய கட்டடத்தில் செயற்படும். (ஐ-3-17)

### அச்சுவேலியில் குழாய்க்கிணறு தோண்டுகையில் அவலச்சம்பவம்

## ஆழக் கிடங்கு திடீரெனத் தூர்ந்ததில் அடியில் நின்ற தொழிலாளி புதையுண்டார்!

### சகதிக்குள் இருந்து சடலத்தை மீட்க இரவிரவாக முயற்சி

அச்சுவேலி,செப்.13

ஆழமாக வெட்டப்பட்ட கிடங்கின் அடியில் நின்று குழாய்க் கிணறு அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் அந்தக் கிடங்கு திடீரெனத் தூர்ந்து மூடியதால் உள்ளே புதையுண்டார். ஆழத்தில் சிக்கிய அவரது உடலை மீட்கும் பணி நேற்று இரவிரவாக மேற்கொள்ளப்பட்டது.

அச்சுவேலி வடக்கு மடத்தடிப் பகுதியில் நேற்று மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம் பெற்றது.

அச்சுவேலி, தோப்பு, கைத்தொழிற்பேட்டை வீதியைச் சேர்ந்த சபாரத்தினம் இரத்தினானந்தம் என்ற 38 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபகரமாக மண்ணினுள் புதையுண்டு மரணமாகியுள்ளார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஆவார்.

குழாய்க் கிணறு அமைப்பதற்காக சுமார் 20 அடி ஆழத்துக்குத் தோண்டப்பட்ட பெரும் குழியின் அடியில் இறங்கி நின்று குழாய்க் கிணறுக்கான 'பைப்' பொருந்தும் வேலையில் இவர் ஈடுபட்டிருந்தார் என்றும் -

அச்சமயம் அந்தக் குழி திடீரெனத் தூர்ந்து மண்ணால் மூடுண்டது எனவும் - கூறப்படுகிறது.

இவருடன் கூட குழியின் அரைவாசிப் பகுதியில் நின்று தொழிலில் ஈடுபட்டிருந்த மற்றொரு

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாதாள கோஷ்டித் தலைவர் திபுலவும் அவரது சகாவும் நேற்று சுட்டுக்கொலை!

## தலைநகர் கொழும்பில் பட்டப்பகலில் சம்பவம்

கொழும்பு,செப்.13

கொழும்பில் பிரபல பாதாள உலகத் தலைவரும் அவரது சகாவும் இனந்தெரியாத மூன்று ஆயுததாரிகளால் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் உள்ள அலெக்ஸ்ஸாண்டிரா டெரஸ் பெற்றோல் நிலையத்துக்கு அண்மையில் இடம்பெற்றது.

திபுல என்றழைக்கப்படும் விஜேந்திர பீட்டர்ஸ்(வயது 37) என்பவரும் அவரது சகாவுமே கொல்லப்பட்டவர்களாவர்.

போட்டிப் பாதாள உலகக் குழுவினருக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையின் ஓர் அங்கமாகவே இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளன என்று கருதப்படுகிறது.

கொல்லப்பட்ட திபுல என்பவர் பிரபல பாதாள உலகத் தலைவர் எனவும், இவர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர் எனவும் பொலீஸார் கருதுகின்றனர்.

நேற்று ரி-56 ரக துப்பாக்கி மற்றும் எம்.எம். 9 ரக கைத்துப்பாக்கி போன்றவற்றுடன் கொலையாளிகள் ஏற்கனவே குறிப்பிட்ட பெற்றோல் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் மறைந்திருந்தனர் என்றும் -

திபுல தனது காருக்கு பெற்றோல் நிரப்பிக் கொண்டு புறப்பட முற்படுகையில் கொலையாளிகள் அவர் மீதும் அவரது சகாக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு ஆட்டோ ஒன்றில் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட காரில் பின் ஆசனத்தில் இருந்த மற்றொருவர் எவ்வித காயமும் இன்றி தப்பியுள்ளார். கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது தாம் பின் சீற்றின் அடிப் பகுதியில் படுத்துத் தப்பிக்கொண்டார் என அவர் பொலீஸாருக்குத் தெரிவித்தார். (க)


# பல்கலை ஊழியர் பிரச்சினை தீர்வு காண இன்று பேச்சு!

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இன்று பேச்சு நடத்தவுள்ளது.

கடந்த 12 நாள்களாக ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்ற வேலைநிறுத்தம் காரணமாக பல்கலைக்கழகங்கள் அனைத்தும் செயலிழந்துள்ளன.

கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக கல்வியமைச்சருடன் பல தடவைகள் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ள போதிலும் சாதகமான தீர்வு கிடைக்கவில்லை. திஸ்ஸ தேவேந்திர ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு அமைவாக சம்பளத் திட்டம் வழங்கப்படவேண்டும் என கல்விசாரா ஊழியர்களின் தொழிற் சங்கம் வலியுறுத்தி வருகின்றது.

இந்நிலையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்படி தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இன்று பேச்சுக்களை நடத்தவுள்ளது. இப்பேச்சுக்களில் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் உபவேந்தர்கள் பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



நேற்று மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் நல்லைக்கந்தன் வள்ளி, தெய்வயானை சமேதரராய் எழுந்தருளி வீதியுலாவந்த காட்சி. *(படம்: கவிதரன்)*

# தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவது தற்கால மாணவர்களின் தலையாய கடமை

## மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,செப்.13

தமிழீழத் தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தும் வகையில் செயற்படுவதே தற்கால மாணவர் சமூகத்தின் தலையாய கடமை.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வெளிமாவட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் இராணுவ - அரசியல் சக்தியை தீர்மானிக்கின்ற மிகவும் வல்லமை பொருந்திய சக்தியாக தமிழினம் உள்ளது.

எங்களுடைய தாயகத்தைப் பொறுத்த மட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் எமது நாட்டினுடைய மிகப்பெரும் சக்திகளாவர்.

அந்த வகையில் மாணவர்களின் செயற்பாடுகளும், அவர்களின் வேலைத் திட்டங்களும் எங்களுடைய தேசியத்தை வளர்க்கின்ற வகையாக அமையவேண்டும்.

கடந்த காலங்களில் நீங்கள் ஏதோ ஒரு வகையில் இந்தப் போராட்டத்துக்கு பங்களிப்பை வழங்கியிருப்பீர்கள். 1990ஆம் ஆண்டு தொடக்கம் 95ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏதோ ஒரு பாடசாலையில் கல்வியைக் கற்று அன்றைய காலப்பகுதியில் ஏதோ ஒரு பங்களிப்பையும் செய்திருப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. இன்று உள்ள சூழ்நிலை மாணவர்களுக்குத் தெரிந்தவையே. அந்த வகையில் எங்களுடைய ஒட்டுமொத்தமான செயற்பாடுகள் இன்று ஒவ்வொரு மட்டங்களிலும் நடைபெறுகின்றன.

களத்திலும், புலத்திலும் எந்தெந்த இடங்களில் எல்லாம் தொடர்புகளையும் செயற்பாடுகளையும் நகர்த்த முடியுமோ அந்த இடங்களில் எல்லாம் அவை நகர்த்தப்பட்டு வருகின்றன.

தேசம் விடியவேண்டும் என்ற அடிப்படையில் மிக நெருக்கமான தொடர்புகளை, மிக நெருக்கமான செயற்பாடுகளையும் எல்லா இடங்களிலும் நாம் செயற்படுத்தி வருகின்றோம்.

மாணவர்களுடைய பங்களிப்பும், எதிர்காலச் செயற்பாடும் எங்களுடைய விடுதலையை விரைவுபடுத்தவேண்டும்.

ஒவ்வொரு மாணவருடைய பங்களிப்பும் தலைவருடைய கரத்தைப் பலப்படுத்துகின்ற காலமாக இந்தக் காலம் உருவாக்கப்படவேண்டும்.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறியபோது யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து 23 மாணவர்கள் போராட்டத்தில் ஒன்றாக இணைந்தனர். இவ்வாறு இணைந்த பேராளிகள் இன்றும் விடுதலை இயக்கத்தில் மிகப் பெரிய செயற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

மாணவர்கள் எதிர்கால சந்ததியினது வழிகாட்டியாகவும், மக்களுடைய மேம்பாட்டுக்கு மிகவும் உழைக்கின்ற சக்தியாகவும் இருக்கின்றார்கள்.

எந்தெந்த இடங்களில் விட்டுக்கொடுப்புகளைக் கொடுக்கமுடியாதோ, எந்தெந்த இடங்களில் பொறுமைகளைக் கடைப்பிடிக்க முடியாதோ அந்தந்த இடங்களில் எல்லாம் நாம் பொறுமையைக் கடைப்பிடித்தோம். அத்துடன் விட்டுக்கொடுப்புகளை செய்ததன் மூலம் எங்களுடைய நிலைப்பாட்டை சர்வதேச மட்டத்தில் முன்வைக்கக்கூடியதாக இருந்தது.

சமாதானத்திற்கு நாம் கொடுத்த விலை மிகவும் அதிகமானது. சமாதான காலத்தில் ஏறத்தாள 52 போராளிகளை இழந்த பின்னரும் யுத்தநிறுத்த காலப்பகுதி நகர்ந்து கொண்டே செல்கிறது.

புலிகள் சமாதான ரீதியில் இருந்து விலகி ஒரு யுத்தத்துக்குள் கீழ் வந்து யுத்தத்தைத் தொடங்கவேண்டுமென இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவும், தேச விரோதக் கும்பல்களும் பாரிய செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

யுத்தநிறுத்த காலப்பகுதியில் சமாதானத்துக்கான முனைப்புக்களை நாம் எடுத்துவந்துள்ளோம். நிச்சயமாக நாம் யுத்தத்தை ஆரம்பிக்கமாட்டோம்.

இதேபோல் யுத்தம் ஒன்று எங்கள் மேல் திணிக்கப்பட்டால் அதற்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் தயாராகவுள்ளோம் - என்றார் அவர். (எ-7-6)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,செப்.13

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி

**16 வயதுப் பிரிவு**

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கந்தோலிக்க வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி (இளவாலை புனித ஹென்றியரசர் மைதானம்)

**14 வயதுப் பிரிவு**

★ ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் நவாலி மகாவித்தியாலயம்

**16 வயதுப் பிரிவு**

★ ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் மாதகல் சென். யோசப் வித்தியாலயம் (மானிப்பாய் இந்து மைதானம்) (3-86)

# கேபிள் ரி.வி. சேவை நடத்திய மூவர் கொழும்பில் கைது!

கொழும்பு,செப்.13

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கேபிள் தொலைக்காட்சிச் சேவைய்யை நடத்தி வந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவரை கொட்டாஞ்சேனைப் பொலீஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

ஜிந்துப்பிட்டி, வாசல வீதி, ஜெம்பட்டா வீதி ஆகிய இடங்களில் பொலீஸார் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனக் கொட்டாஞ்சேனை பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் மூவரும் அனுமதியின்றி வெளிநாட்டுத் தொலைக்காட்சிச் சேவை இணைப்பை கொட்டாஞ்சேனைப் பகுதியில் வழங்கி வந்தனர் எனவும்-

இவர்களை நீதிமன்றத்தில் தாங்கள் ஆஜர் செய்யவுள்ளனர் எனவும் -

பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

# புதிய நீதிமன்றக் கட்டடம் திருமலையில் திறந்துவைப்பு

திருகோணமலை,செப்.13

திருகோணமலையில் உலக வங்கியின் உதவியுடன் சுமார் ஏழு கோடி 90 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட நவீன நீதிமன்றக் கட்டடத் தொகுதி நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இந்தக் கட்டடத் தொகுதியைத் திறந்துவைத்தார்.

சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன், நீதி அமைச்சின் செயலாளர் சுகத் கே.கம்லத், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் இக்ரம் முஹமட் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்ரன் பாலசிங்கம், மாவட்ட நீதிபதி எஸ். தியாகேந்திரன், நீதிவான் எம்.கணேசராஜா ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஓ.எல்.எம்.இஸ்மாயில் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

புதிய கட்டடத் தொகுதியில் மேன்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மஜிஸ்திரேட் நீதிமன்றம், தொழில் நீதிமன்றம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட நீதிபதிகள், நீதிவான்கள், சட்டத்தரணிகள், திருமலை அரச அதிபர், மேலதிக அரச அதிபர், பொலீஸ் உயர் அதிகாரிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (க)

# வீதி விபத்தில் மாணவன் மரணம் ஆத்திரமுற்ற மக்கள் வாகனத்தை எரித்தனர்

## நேற்று மாலை புத்தளத்தில் சம்பவம்

புத்தளம், நுரைச்சோலை என்னுமிடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவரொருவன் அந்த இடத்திலேயே மரணமானான். ஆத்திரமுற்ற மக்கள் பஸ்ஸை முற்றுகையிட்டு தீவைத்து எரித்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.

எம்.ரிழ்வான் என்னும் 12 வயது பாடசாலை மாணவனே பலியானவராவர். பாதையைக் கடக்க முயற்சித்த சமயம் தனியார் பஸ்ஸினால் மோதுண்டு இவர் மரணமானார் எனக் கூறப்பட்டது.

இதையடுத்தே பஸ்ஸுக்குத் தீ வைக்கப்பட்டது. இப்பாதையில் எதுவித பஸ்ஸும் ஓட அனுமதிக்கப்படவில்லை.

பதற்றத்தைத் தடுக்க கற்பிட்டிப் பொலீஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (3-186)

# நாணய நிதிய அதிகாரிகளை ஜே.வி.பியினர் சந்திக்கின்றனர்

கொழும்பு,செப்.13

ஜே.வி.பியின் உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சு இன்று நண்பகல் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

ஜே.வி.பி.அமைப்பின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான விமல் வீரவன்ஸ, ஜே.வி.பி. அமைப்பின் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான செயலாளரும் கலாசார மற்றும் தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சருமான விஜித ஹேரத் ஆகியோரும் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதியான ஜேரம் கார்ட்டர் உட்பட அதிகாரிகள் குழுவென்றும் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதியான ஜேரம் கார்ட்டரின் கோரிக்கையின் பேரிலேயே ஜே.வி.பியின் உறுப்பினர்கள் இப்பேச்சுக்களில் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

உதயன்

## நெருக்கடி தரும் நெருக்குவாரங்கள்

ஆட்சி, அதிகாரம், பதவி ஆகியவற்றின் மீது மட்டுமே கண்ணாக இருந்ததால் அதற்காக நாட்டின் அரசியல் போக்கையே குழப்பியடித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது அடுத்து என்னசெய்வது என்று தெரியாமல் தடுமாறி நிற்கின்றார்.

இன்னும் ஒன்றே கால் வருடத்துக்குள் தனது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியின் ஆட்சிக்காலம் முடிய - அரசிலிருந்து துறவறம் பூண்டு - ஒதுங்க வேண்டிய இக்கட்டை தற்போதைய அரசமைப்பு அவருக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த அரசமைப்பை மாற்றினாலன்றி அடுத்த ஒன்றே கால்வருட காலத்தின் பின்னர் அரசியலில் தாம் செல்லாக் காசாவது உறுதி என்ற யதார்த்தம் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு இப்போது மெல்ல மெல்லப் புரியத் தொடங்கிவிட்டது.

ஆட்சியைப் பிடிப்பதற்காக பேரினவாதிகளின் ஆதரவைப் பெற்று கூட்டமைத்தது எவ்வளவு பெரியதப்பு - மூடத்தனம் - என்பதும் நாட்டின் தலைவிக்குப் புரியத் தொடங்கியுள்ளது.

கூட்டரசினால் நாட்டின் பொருளாதாரத்தை சீர்படுத்த முடியவில்லை. விலைவாசி எக்கச்சக்கமாக எகிறுகிறது ரூபாவின் மதிப்பு குறைந்து வருகின்றது. விலை வாசி உயர்வினால் நாட்டு மக்களின் எரிச்சலும் சீற்றமும் விறுகொண்டுவருகின்றன.

அரசமைப்பை மாற்றும் முயற்சியும் சாத்தியமற்றதாகி வருகின்றது. சமாதான முயற்சிகளும் - கூட்டரசின் கொள்கைகளினால் - சாத்தியமற்றதாகி, அமைதித் தீர்வுக்கான வாய்ப்புக்கள் அருகிவருகின்றன.

இத்தகைய நிலைமைகளினால் நாட்டின் எதிர்காலமும் தனது கட்சியினதும் தன்னுடையதும் அரசியல் எதிர்காலமும் மோசமாகி வருவதை உணர்ந்துள்ள ஜனாதிபதி குமாரதுங்க, நாட்டின் களநிலைவரம் தொடர்பான மற்றொரு உண்மையையும் வெளிப்படுத்தியிருக்கின்றார். தனது கட்சி முக்கியஸ்தர்களுடன் கடந்தவாரம் நடைபெற்ற ஒரு மந்திராலோசனைக் கூட்டத்தில் அவர் வெளியிட்ட தகவல் கட்சிப் பிரமுகர்களுக்கு பேரிடி தரும் குண்டாய் வந்து விழுந்திருக்கின்றது.

*'சமாதான நடவடிக்கைகள் குறித்து எவரும் விமர்சிக்கவோ கருத்துக்கூறவோ கூடாது. தாங்கள் என்ன கூறுகின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ளாமலேயே ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை வெளியிடுகின்றார்கள். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை மட்டுமல்ல தனிநாடு ஒன்றையே பெறக்கூடிய பலத்தில் புலிகள் இருக்கின்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒரு யுத்தத்துக்கு இலங்கை இராணுவம் தயார் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்களா? எனவே தயவு செய்து அமைதி நடவடிக்கைகள் குறித்துப் பேசாமல் வாயை மூடிக்கொண்டு இருங்கள். அந்த விடயத்தை நான் கையாளுகின்றேன்'* - என்று ப்ச்சையாகவே' கூறியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

கள நிலைவரத்தின் ஆழம் ஜனாதிபதிக்குப் புரியத் தொடங்கியதும் - அதன் விளைவுகளின் பாதிப்பு எப்படி இருக்கும் என்பது ஜனாதிபதிக்கு உறைக்கத் தொடங்கியதும் - அந்த இக்கட்டிலிருந்து எப்படி மீளுவது என்ற மலைப்பில் அவர் மூழ்கியிருக்கின்றார்.

வரப்போகின்ற பிரச்சினைகளின் - பின்னடைவுகளின் - பொறுப்பைத் தாம் தனியே எதிர்கொண்டால் அது தன்னையும் கட்சியையும் அரசியல் அந்தரத்தில் கொண்டு போய் நிறுத்திவிடும் என்பது தெளிவாகத் தெரிவதால், பொறுப்பைக்கூட்டுச் சேர்ந்து சுமக்க ரணில் விக்கிரமசிங்கவையும் துணைக்கு அழைக்கின்றார் அவர்.

எதிர்க்கட்சித் தலைவரை நேரடிப் பேச்சுக்கு வருமாறு கடந்த வாரம் அவர் அழைத்ததன் உட்சூட்சுமம் இதுதான்.

ஆனால்..

ரணிலா, கொக்கா? - அவர் பிடி கொடுக்கா மல் நழுவி விட்டார்.

உங்களுடைய அமைதி முயற்சிகளை 'ஜாரி' கட்டிச் சுமக்க நாம் தயாரில்லை. அரசு என்ற வகையில் நீங்களதான் முடிவுகளை எடுக்கவேண்டும். தீர்மானங்களை எடுத்து புலிகளுடன் பேசி சமாதான முயற்சிகளை முன்னெடுங்கள். நாங்கள் வெளியிலிருந்து ஆதரவுதருவோம். குழப்பமாட்டோம்.- என்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு உறுதி கூறி நழுவி விட்டார் எனத் தகவல்.

இப்போது தாம் தனித்து எப்படி முடிவுகளை எடுப்பது என்று தெரியாமல் தடுமாறுகின்றார் குமாரதுங்க.

கூட்டுச் சேர்த்துக்கொண்ட பிரதான பங்காளிக் கட்சயான ஜே.வி.பி. தன்னை அப்படி முடிவெடுக்கவிடாது என்ற சிக்கல் சந்திரிகாவுக்கு.

ஜே.வி.பியை உதாசீனப்படுத்திவிட்டு இனப்பிரச்சினை தொடர்பாகத் தீர்க்கமான முடிவுகளை எடுத்தால் அரசின் காலை ஜே.வி.பி. வாரி விடும். அரசே கவிழ்ந்து விடும்.

அமைதிப்பேச்சை முன்னெடுக்க ஆட்சிப் பங்காளிகள் விடுகின்றார்கள் இல்லை. அவர்களை மீறிச் செயற்படுவதற்கு வெளியிலிருக்கும் ஐ.தே.கட்சி உட்பட மற்றைய கட்சிகள் ஒத்துழைப்பதாக இல்லை. சமாதான முயற்சிகள முன்னெடுக்கப்படாவிட்டால் சர்வதேச நிதி உதவிகள் இல்லை என்று உதவும் நாடுகள் கைவிரித்து விட்டன. சர்வதேச உதவிகள் இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதார நிலைமை இன்னும் மிகமிக மோசமாகிவிடும். மக்கள வீதிக்கு இறங்கிப் போராடும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

இவற்றிலிருந்தெல்லாம் தப்புவதற்குத்தான் பல்வேறு பிரயத்தனங்களில் ஈடுபடுகின்றார் ஜனாதிபதி.

வரமுன் சிந்தித்திருக்க வேண்டிய விடயங்கள்- வந்த பின் சிந்திக்க முடியாத இக்கட்டுக்கள் இவை.

---

### பலாலி படைத்தளச் சூட்டுச்சம்பவம்;

# நீதிமன்று விதித்த நிபந்தனையை ஏற்பதற்கு மறுத்த படைத்தரப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

பலாலி விமானப்படைத்தளத்தில் கடந்த ஜூலை மாதம் 7 ஆம் திகதி நடைபெற்ற சூட்டுச்சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விமானப்படைச் சிப்பாயை பிணையில் விடுவதற்கு நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளை விமானப் படை அதிகாரிகள் ஏற்க மறுத்துள்ளனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பலாலி விமான நிலையத்துக்கு இடமாற்றலாகி வந்த சிப்பாய் ராகிங்கிற்கு உட்படுத்தப்பட்டார். அச்சமயம் ராக்கிங் கொடூரத்தைத் தாங்காத குடாகே வடலகே சனத் குமுது குமார என்ற சிப்பாய் சக சிப்பாயைச் சுட்டுவிட்டார்.

இது தொடர்பாக அவர் மீது கொலை முயற்சி வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது. நீதிமன்றத்தில ஆஜர் செய்யப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை பதில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அச்சமயம் விமானப்படை சார்பில் ஆஜரான சட்டத்தரணி டெசிதெனிய மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

'பிரஸ்தாப சம்பவம் குறித்து விமானபபடை அதிகாரிகள் விசாரணை செய்து அவரைக் குற்றவாளியாகக் கண்டு, மூன்று மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளனர். எனவே அவரை விமானப்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று அந்த மனுவில் கோரினார்.

விமானப்படை அதிகாரிகள் நடத்திய விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி நீதிவான் கோரியதை அடுத்து அந்த அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையை ஆராய்ந்த நீதிவான் பின்வரும் நிபந்தனைகளுடன் சிப்பாயைப் பிணையில் விடுவதற்கு உத்தரவிட்டார்.

இரு விமானப்படை அதிகாரிகள் தலா 50 ஆயிரம் ரூபா பிணை வழங்கவேண்டும்.

★பிணையில் அழைத்துச் செல்லும் போதும் 90 நாள்கள் முடிந்து நீதிமன்றத்தில் சிப்பாயைக் கையளிக்கும்போதும் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்நிறுத்தி சிப்பாய் உடல், உள நிலை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பவையே நீதிவான் பிறப்பித்த நிபந்தனைகள் ஆகும்.

இந்த நிபந்தனையின் அடிப்படையில் சிப்பாயைப் பிணை எடுக்கத் தாங்கள் தயாரில்லை என்று விமானப்படை சார்பில் ஆஜ ரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்நிலையில், பிரஸ்தாப சிப்பாயின் பெற்றோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.சபாநாதன், பிரஸ்தாப சிப்பாய் 2 மாதங்களுக்கு மேல் விளக்கமறியலில் இருந்துள்ளார். கொலை முயற்சியுடன் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டு என்பதால் அவரைப் பிணையில் விடலாம். அவரது பெற்றோர் அவரை அழைத்துச் செல்ல வந்துள்ளனர் என்று நீதிவானிடம் தெரிவித்தார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிவான் சிப்பாயைப் பிணையில் செல்ல அனுமதித்து ஒரு மாத காலத்துக்கு வழக்கை ஒத்தி வைத்தார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட சிப்பாயை விமானப்படையினர் கைதுசெய்து, தமது தண்டனையை வழங்குவர் எனக் கூறப்பட்டது.

(எ-3)

---

# அரியாலை சூனியப் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகுறித்து முறைப்பாடு

### பொலீஸாரைக் காவலுக்கு நிறுத்தவும் ஆலோசனை

யாழ்ப்பாணம்,செப்.13

அரியாலை முள்ளிப் பகுதியில் படைமுகாமைச் சூழவுள்ள 600 மீற்றர் தூரமுள்ள - யுத்த சூனியப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசம் யுத்த சூனியப் பிரதேசம் என்பதால் அப்பகுதியில் தம்மால், எதுவும் செய்யமுடியாது என படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதற்குப் படையினர் உடந்தையாக இருக்கின்றனர் என்று கிடைத்த முறைப்பாடுகளையடுத்து யாழ். நீதிமன்றத்தில் சந்திப்பு ஒன்று ஏற்பாடுசெய்யப்பட்டது.

யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் நடத்த இச்சந்திப்பில் 512, 514 ஆவது படைகளின் கட்டளை அதிகாரிகள், இராணுவத்தின் சட்ட ஆலோசகர் கப்டன் குறூப்பு ஆகியோர் கலந்துகொண்டனர்.

படைமுகாமைச் சூழவுள்ள 600 மீற்றர் தூரமுடைய யுத்த சூனியப் பிரதேசத்திலேயே சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக அறிகின்றோம். எமக்கும் இந்த மணல் அகழ்வுக்கும் தொடர்பு ஏதும இல்லை. இந்தப் பிரதேசத்தில் எமது படையினரால் எதுவும் செய்ய முடியாது என்று படைத்தரப்புத் தெரிவித்தது.

இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு இராணுவக் காவலரண்களில் இரு பொலீஸாரைப் பணியில் ஈடுபடுத்தலாம் என ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகப் படை அதிகாரிகள் உறுதியளித்தனர்.

இதேவேளை -

மல்லாகத்தில் உள்ள 513.ஆவது படையணி முகாமைச் சூழவுள்ள 600 மீற்றர் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி பெரியளவில் இடம்பெறுவதாக நீதிவான் பிரஸ்தாபித்தார்.

அத்தகைய செயற்பாட்டை நிறுத்தப் படை அதிகாரிகளுடன் ஆராய்ந்து ஆவண செய்வதாக கப்டன் குறூப்பு தெரித்தார்.

(எ-3)

---

## எயிட்ஸ் நோயைக் குணமாக்கும் மருந்து

புதுடில்லி,செப்.13

எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்துவதற்கான இரண்டுவகை மருந்துகளை இந்திய மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

புதுடில்லியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இம்மருந்துகள் நோயாளிகளின் மீது சோதித்துப்பார்த்ததில் வெற்றியளித்திருப்பதாகக் கூறும் விஞ்ஞானிகள் இம் மருந்துகள் இவ்வருடம் சென்னையிலும் வேறு பகுதிகளிலும் சோதித்துப்பார்க்கப் படவிருப்பதாகவும்-

இங்கும் அவை வெற்றியளித்தால் சகலருக்கும் பயன்படும் வகையில் இம் மருந்துகள் தயாரிக்கப்படும் என்றும் - அறிவித்துள்ளனர். (ப)

---

## ஹாட்லிக் கல்லூரிக்கு பழைய மாணவர் உதவி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் அக்கல்லூரிக்கு அன்பளிப்பாக இரண்டு லட்சம் ரூபா ரொக்கப் பணத்தை வழங்கியுள்ளார்.

லண்டனில் பொறியியலாளராகப் பணி புரியும் புலோலி மத்தியைச்சேர்ந்த கதிர்காமநாதன் என்பவரே தாம் கல்வி கற்ற ஹாட்லிக் கல்லூரியின் அபிவிருத்தியின் பொருட்டு இந்நிதியை வழங்கியுள்ளார்.(எ-15)

---

## நாளை

ஆவணி 29

செவ்வாய்க்கிழமை

(14.09.2004)

திதி : அமாவாசை

முன்னிரவு 8.47 வரை

நட்சத்திரம் : பூசம்

முன்னிரவு 6.42 வரை

சுபநேரம்: 10.33-12.03

ராகுகாலம்: 3.03-4.33

(பழைய நேரப்படி)

---

# மினிபஸ் கட்டண அதிகரிப்புக் குறித்து யாழ்.அரச அதிபருடன் சங்கம் பேச்சு

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் மினிபஸ் வண்டிகளின் உத்தேச அதிகரிப்புக் கட்டணத்தை இறுதிசெய்து உறுதிப்பாக்கும் பொருட்டு யாழ். மாவட்ட தனியார் மினிபஸ் சேவைச் சங்கங்களின் சங்கம் யாழ் அரச அதிபருடன் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பேச்சு நடத்தவுள்ளது.

மினிபஸ் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான கட்டண விவரத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு யாழ். மாவட்டத் தனியர் மினிபஸ் சேவைச் சங்கங்களின் சங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளது. அவ்வட்டாரப் பட்டியலில் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை கட்டணத்துக்கும் மினிபஸ் கட்டணத்துக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த முரண்பாடுகளைக் களைந்து தீர்க்கமான இறுதியான மினிபஸ் கட்டண அதிகரிப்பை தீர்மானிப்பதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதிநிதியாக பதவி வழியாக பொறுப்பு வகிக்கும் யாழ்.அரச அதிபருடன் பேச்சுக்களை நடத்துவதென யாழ்.மாவட்ட தனியார் மினிபஸ் சேவைச் சங்கங்களின் சங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது குடாநாட்டில் மினிபஸ் கட்டணம் அதிகரித்துள்ளபோதிலும், அரச அதிபருடனான பேச்சுக்களுக்குப் பின்னரே அக்கட்டண அதிகரிப்பு இறுதி செய்யப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.

(எ-173)

---

# மந்திகை வைத்தியசாலையில் மீண்டும் மகப்பேற்றுப் பிரிவு

வடமராட்சி,செப்.13

பருத்தித்துறை (மந்திகை) அரசினர் ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்று வைத்திய சிகிச்சைப்பிரிவு கடந்த 7 வருடகால இடைவெளிக்குப் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இச்சிகிச்சைப் பிரிவை மகப்பேற்று வைத்திய நிபுணராக இவ்வைத்தியசாலைக்கு மீண்டும் நியமனம்பெற்ற டாக்டர் இ.குழந்தை வடிவேல் நடத்தி வருகிறார்.

இவ்வைத்திய நிபுணர் கடந்த 1997 ஆம் ஆண்டுவரை சுமார் 8 ஆண்டுகளுக்கு மேலாக மகப்பேற்று வைத்திய நிபுணராகக் கடமையாற்றி அரும்பெரும் சேவைகளை ஆற்றி இருந்தார்.

1997 ஆம் ஆண்டு தொடக்கம் புத்தளம் அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட இவர் இதுவரைகாலமும் அங்கு பணியாற்றிவந்தார்.'

அவ் வைத்தியசாலையிலிருந்து இவர் ஓய்வு பெற்றதும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம்பெற்று பணியாற்றத் தொடங்கியுள்ளார்.

இவர் புத்தளத்துக்கு இடம்மாற்றலாகிச் சென்று மீண்டும் இங்கு பணியாற்ற வரும்வரையான 7 ஆண்டு காலமாக மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் இவ் வைத்தியசாலைக்கு நியமிக்கப்படாமல் இருந்துவந்தது. இக் காலங்களில் இங்கு பணிபுரிந்த உதவி வைத்தியர்களே இச்சிகிச்சை பிரிவை நடத்தியதுடன் பெரும் பாதிப்புக்குள்ளான கர்ப்பிணித்தாய்மார்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-173)

---

## உதயவாக்கு

அன்பாகவும், உண்மையாகவும், இனிமையாகவும் பேசுவதற்கு ஒரு சதம் கூடச் செலவழிக்கத் தேவையில்லை.




காணாமற்போனோரின் பெற்றோர், குடும்ப அங்கத்தவர்களுக்கான அமைப்பு குடாநாட்டில் காணாமற்போனோரின் உறவினர்களை நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது. இச்சந்திப்பில் கலந்துகொண்ட காணாமற்போனோரின் பெற்றோர், குடும்ப அங்கத்தவர்களுக்கான அமைப்பின் தலைவர் கே.ஜீ.சாக்கிய நாணயக்கார, செயலாளர் சாந்தா டி பத்திரன மற்றும் உறுப்பினரும் படத்தில் உள்ளனர். *(படம்: புஷ்பா)*

# நவாலி வெள்ளவாய்க்கால்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை

நவாலி,செப்.13

கடந்த 30 வருடங்களாக புனரமைக்கப்படா மையினால் வெள்ளம் ஓடமுடியாமல் தடைப்பட்டிருந்த நவாலி சங்கையான், சின்னப்பா வீதி வெள்ளவாய்க்கால்களை உடன் புனரமைப்பதறகு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் பொதுமக்களும் மானிப்பாய் பிரதேச சபைக்கு மகஜர்கள் அனுப்பியதுடன், நேரில சென்றும் முறைப்பாட்டைப் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து கடந்த 8ஆம் திகதி மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் பி.விகடர், உள்ளூராட்சி உதவியாளர் எஸ்.ரமேஸ் ஆகியோர் தலைமையில் தொழில்நுட்ப உத்தியோகததர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உட்பட 10 பேர் கொண்டகுழுவினர் இந்த வாய்ககால களைப் பார்வையிட்டனர்

அப்போது வாய்க்காலை வழிமறித்துச் சிமெந்தினால் கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததையும் குறுக்கே வேலிகள் அமைக்கப்பட்டிருந்ததையும் மண்ணைக் கொட்டி நிரவி தென்னம்பிள்ளைகள் நடுகை செய்யப்பட்டிருந்ததையும் இந்தக் குழுவினர் அவதானித்தனர்.

இது விடயமாக சமபந்தப்பட்டவர்கள் அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது இந்த வாய்க்காலகளை உடன் திருத்துவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு, இதன் முதற்கட்டமாக கடந்த 10ஆம் திகதி முதல் பத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டு பற்றைகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைகள் எதிர்வரும் 23ஆம் திகதியுடன் முடிவடைந்து பின்னர் அணைக்கட்டு வேலைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-100)

## நல்லூர் சூழலில் திருட்டுக்களைத் தடுக்க சிறப்புச் செயலணியினர் சேவை

வலி.வடக்கு,செப்.13

நல்லூர் ஆலய தேர்த்திருவிழாவில் அடியார்களின் நன்மைகருதி ஆலய வீதியில் அமைந்துள்ள சிறப்புச் செயலணியினர் பல்வேறு வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற திருட்டுக்கள் மற்றும் அசம்பாவிதங்களைக் கருத்தில் கொண்டு இம்முறை ஆலய வீதிகளில் சிறப்புத் தொண்டர்கள் சிவில் உடையில் கடமையாற்றவுள்ளனர். ஆலயச் சுற்றாடலில் உள்ள அடியார்கள் எந்த நேரமும் சிறப்புச் செயலணியினருடன் தொடர்புகொள்ளமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-86)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 611 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 10-09-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5897178-5912548 |

வெற்றி இலக்கங்கள்
01 12 52 54

லக்கினம் மீனம்

ஜக்பொட் பரிசு ரூபா.40,99,600/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 48,66,950/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,43,574 | 10/- | 34,35,740/- |
| 2.இலக்கங்கள் | 31,556 | 20/- | 6,31,120/- |
| 1.இல + லக்கினம் | 31,268 | 30/- | 9,38,040/- |
| 2.இல + லக்கினம் | 2,850 | 100/- | 2,85,000/- |
| 3.இலக்கங்கள் | 840 | 500/- | 4,20,000/- |
| 3.இல + லக்கினம் | 71 | 5,000/- | 3,55,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 40,99,600/- | - |
| மொத்தம் | 4,10,169 | - | 76,95,150/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,95,150/-

தொடர் இல. 4937632 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5904133-7-13
5901438-2-89
5905897-6-71
5904774-6-50
5907286-5-86


## காலபோக நெற்செய்கைக்கு காரைநகரில் ஏற்பாடுகள்

காரைநகர்,செப்.13

அண்மையில் பெய்த மழையை அடுத்து காரைநகர்ப் பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்துவதிலும் வரம்புகள் கட்டுவதிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக செய்கை பண்ணப்படாமல் உள்ள பெருமளவு நெற்காணிகளில் இவ்வாண்டு முதல் நெற்செய்கை மேற்கொள்வதற்கு காரைநகர் பிரதேச விவசாய சம்மேளனம் துரித நடவடிக்கை எடுத்துவருவதாகவும் -

புதிதாக நெற்செய்கை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளையும் நெற்காணிகளை குத்தகைக்கு வழங்க விரும்பும் காணி உரிமையாளர்களையும் தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் - காரைநகர் பிரதேச விவசாய சம்மேளனத் தலைவர் வே.சிற்சபேசன் கேட்டுள்ளார். (எ-73)

## காரைநகர் மேற்கு வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை

காரைநகர்,செப்.13

மிக மோசமாகச் சேதமடைந்துள்ள காரைநகர் மேற்கு பிரதான வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் மிக மோசமாக சேதமடைந்திருப்பதுடன், குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால், இவ்வீதி, ஊடாகப் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

இதேவேளை - இவ்வீதியின் அருகில் காணப்படும் விவசாய வாய்க்கால் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் இவ் வாய்க்கால் மணலால் நிரவப்பட்டுக் காணப்படுகின்றது.

இதனால், மழைக்காலங்களில் இவ்வீதியில வெள்ளம் நிறைந்து போக்குவரத்துத் தடைப்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

எனவே, இவற்றை புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-73)

## அலங்கார உற்சவம்

வண்ணை சாந்தையார் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோயிலின் அலங்கார உற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 4.30 மணிக்கு ஸ்நபினா அபிஷேகம், 5 மணிககு மாலைப் பூசை, 5.15 மணிக்குத் திருமுறை ஓதல, 6 மணிக்கு வசந்தமண்டப் பூசை நடைபெற்று, 6.30 மணிக்கு சுவாமி உள் வீதிவலம் வருதல் என்பன இடம்பெறும். (எ)

## காரைநகரில் வீரமுரசு நிகழ்வு

காரைநகர்,செப்.13

காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை நடத்தும் வீரமுரசு நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை இரவு 7 மணிக்கு காரைநகர் சிவகாமி அம்மன் கோயில் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சங்கநாதம் இசையும் அசையும், நடன நிகழ்ச்சி, காவடி, கரகாடம் உட்படப் பல கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (எ-73)


## தவறிவிட்டது

வெலிங்ரன் வீதி, அக்கரைப்பற்று 07, ஆறுமுகம் திலகவதி (717850920V), பூபாலபிள்ளை விநாயகமூர்த்தி, ஆலடி வேம்பு, அக்கரைப்பற்று-வேலூர் (680652729V) இருவரின் அடையாள அட்டையும் வெள்ளிக்கிழமை 6.30 p.m. மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை சென்ற பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

T.P: 0776013871 முகவரி: M.அர்ச்சுனன் புதிய செங்குந்தான் வீதி, கல்வியங்காடு. (மணி பேக்கறி)



## TAV தொழில்நுட்பக்கல்வி

சுவிஸில் 1998 இல் இருந்து தமிழ்மொழியில் தொழிற் கல்வியை வழங்கி இதனூடாக தமிழர் பலர் வேலைவாய்ப்பைப் பெற வழிவகுத்த ஒரே நிறுவனம் *TAV* ஆகும். சுவிஸிலுள்ள தொழிற்பயிற்சி வழங்கும் இந்நிலைய மானது ABB, ALSTOM போன்ற பெரிய தொழிற்சாலைகளை அங்கத்தவராக இணைத்து மேலும் சுவிஸில் 100 இற்கும் மேற்பட்ட தொழில்நிறுவனங்களை அங்கத்தவராகவும்கொண்ட பயிற்சி நிலையமாகும். எமது நேரடியான தமிழ்மொழி விளக்கத்துடன் நடைபெறும் பயிற்சியானது மிகப் பெறுமதிமிக்க உயர்வைத் தரவல்லது.

### தொழில்நுட்பக் கல்வி கற்கைநெறி

- ★ CNC Programmer (புரோகிராமர்)/ Manufacturing Engineer
- ★ Technician

**கற்கைநெறிக்கான தகைமை:**
க.பொ.த(சா.த.) பரீட்சைச் சித்தியுடன் கணிதபாடத்தில் சிறப்புச்சித்தி

**வயதெல்லை: 18-33**

★ காலை 10.00 தொடக்கம் மாலை 6.00 மணிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்

**விண்ணப்ப முடிவுதிகதி: 15.09.2004**

விண்ணப்பத்தை சுயவிரத்துடன் தேசிய அடையாள அட்டைப் பிரதியையும் தெளிவான முகவரியுடன் அனுப்பிவைக்கவும். நேர்முகப்பரீட்சையில் கடந்த 6வருட பயிற்சி விவரம் காண்பிக்கப்பட்டு இக்கல்வி உங்களுக்கு உயர்வைத் தர வல்லதா என சுயமாகத் தீர்மானிக்கவும் வேலை வாய்ப்பு, சுயதொழில் ஆரம்பித்தல் போன்ற விடயங்களுக்கு விளக்கமும் அளிக்கப்படும்.

விண்ணப்ப முகவரி:
TAV,
Salzweg 1, 8048
Zurich Switzerland.

தொடர்புகளுக்கு:
செல்வசிவபரன்
Tel 0041+1430 3074
079/712 37 46,
தொலைநகல் Fax: 01 430 31 44

தொடர்புகளுக்கு:
லக்ஷன் போட்டோ அன் வீடியோ
பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (35717)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா மயில்வாகனம்



நாயன்மார்கட்டைச் சேர்ந்த திருமதி கனகம்மா மயில்வாகனம் அவர்கள் நேற்று (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*32/10, அம்பாள் வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.* (36370)(43-11-16)

தகவல்:
தி.மகேந்திரன், (மருமகன்),
ம.சுந்தரராசா (மகன்).

### திருச்செல்வம் பத்திநாதர்

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் பத்திநாதர் 11.09.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அருள்மேரியின் அன்புக் கணவரும் திருச்செல்வம் - ஆனந்தம் ஆகியோரின் அன்பு மகனும் யூஜின் பிரதீபன், டெனின் ஜெகதீபன், ஜெனற் ஜோஜினா, கனோல்ட் டெல்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வதனாவின் மாமனாரும் பிரதீபனின் பேரனும் யுகராஜா, ஞானமலர், ஜேசுதாசன் (இலங்கை வங்கி), நேசமலர், லில்லிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் துரை - முததுப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் அருட்செல்வம் (இத்தாலி), யோசேப், யோகமணி திரேசம்மா, யோகராணி, வசந்தி (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (13.09.2004) திங்கட்கிழமை புனித சின்னப்பர் தேவாலயத்தில் பகல் 10 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கோண்டாவில் ஆலடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T.ஜேசுதாசன் (சகோதரன்).

(36367)(24-11-30)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
26 ~ 07 ~ 1933



இறைவன் அடியில்
14 ~ 08 ~ 2004

### அமரர் முத்துலிங்கம் சண்முகலிங்கம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்
பாசத்தின் இருப்பிடமாய்
வாழ்ந்த எம் தெய்வமே!
முப்பத்தொரு நாள்கள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மட்டும் ~ என்றும்
எங்களை விட்டகலாது ~ உங்கள்
ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (13.09.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளில் உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

*ஆனந்தபுரம்,*
*கிளிநொச்சி.* (36366)(11-30)

மனைவி, மகன்மார், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈமத்தாழிகள் சாட்டியில் மீட்பு!

## யாழ். பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுக்குழு கண்டுபிடித்தது

யாழ்ப்பாணம்,செப்.13

வேலணை - சாட்டிப் பகுதியில் தொல்லியில் ஆய்வை மேற்கொண்டுவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கீலாநிதி ப.புஷ்பரட்ணம் தலைமையிலான தொல்லியல் ஆய்வுக்குழுவினர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈமத்தாழிகளைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

கலாநிதி புஷ்பரட்ணம் தலைமையில் 15 இற்கும் மேற்பட்ட தொல்லியல் மாணவர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர். யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலனும் இவர்களுடன் ஆய்வில் பங்கேற்றிருந்தார்.

இந்த ஆய்வின் முக்கியத்தும் தொடர்பாகக் கலாநிதி புஷ்பரட்ணம் கருத்துத் தெரிவித்த போது:-

சாட்டியில் மாவீரர் மயானத்திற்கு வடக்கே பற்றைகள் நிறைந்த மண்மேடு ஒன்றை ஆய்வுக்குரிய மையமாகத் தெரிவுசெய்து அங்கு மாதிரி ஆய்வுக்குழு அமைத்து முதலில் அகழ்வு செய்து பார்த்தோம் -

அந்த அகழ்வின்போது அதன் இயற்கை மண்ணுடன் ஒட்டிய நிலக்கீழ்ப் பாறையில் செய்கையாக வடிவமைக்கப்பட்ட தோற்றம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த மண்மேட்டைச் சுற்றி முழுமையான அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது நிலமட்டத்தில் அமைந்து பாறை வட்டமாகச் செதுக்கப்பட்டு அதற்கு மேல் செயற்கையாக வடிவமைகப்பட்ட கற்களைக் கொண்டு வட்டமாக 4 அடி உயரத்திற்கு ஈமச்சின்னம் அமைக்கப்பட்டிருநததைக் கண்டுபிடிக்கமுடிந்தது -

அந்தக் கட்டடப் பகுதிக்குள் மூன்றுக்கு மேற்பட்ட ஈமத்தாழிகளின் பாகங்களும், இறந்தவர்களுக்காக வைக்கப்பட்டிருந்த படையற் சட்டிகளின் பாகங்களும் காணப்பட்டன -


இது இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தீவகத்தில் வந்து குடியேறிய பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய திராவிட மக்களால் அமைக்கப்பட்ட ஈமச் சின்னம் என்பதை இவ்வாய்வுக் குழியில் இருந்து மேலும் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டிற்கே சிறப்பாக உள்ள கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள், கைவளையலின் உடைந்த பாகம், கெண்டியுடன் கூடிய பானையின் பாகம், வெண்கலப் பொருள்கள் என்பன உறுதிசெய்கின்றன -


இந்த ஈமச்சின்னத்தின் அமைப்பும், அவற்றை அமைக்கப் பயன்படுத்திய கற்களின் தொழில் நுட்பமும் தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடுமியாமலையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்ன முறையை நினைவுபடுத்துவதாக உள்ளது -

இந்த ஈமச்சின்னம் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய கால மக்களின் ஈமச்சின்னங்களில் தனித்துவமும், சிறப்பும் வாய்ந்ததென நிச்சயப்படுத்திக் கூறலாம். இவ்வட்டாரத்தில் பரவலாக ஈமத்தாழிகள் இருப்பதற்கான சான்றுகளை 10 இற்கு மேற்பட்ட இடங்களில் அடையாளப்படுத்தி உளளோம் -

இந்த இடங்களில் தொடர்ந்து அகழ்வை மேற்கொள்வதற்கு வேண்டிய அனுமதியுடன், நிதியுதவி உட்பட அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்ய யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் முன்வந்திருப்பதால் தொடர்ந்து நாம் மேற்கொள்ளும் ஆய்வில் மேலும் பல புதிய சான்றுகள் கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றோம் - என்று தெரிவித்தார்.

(எ-4)





ஈமச்சின்னம் அமைக்கப் பயன்படுத்திய கற்களையும் ஆய்வில் அகழ்வுசெய்யப்பட்ட குழியையும் (உள்ளே) முதலாவது படத்திலும், ஈமச்சின்னத்தில் கிடைத்த தாழிகளையும் அகழ்வுசெய்யப்பட்ட தொல்லியல் மையத்தின் தோற்றத்தையும் (உள்ளே) இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: ஆய்வுக்குழு)*

# தமிழர்கள் தங்கள் அபிலாசைகளை அடைவதை யாருமே தடுக்க முடியாது!



## மகேஸ்வரன் எம்.பி.நாடாளுமன்றில் சூளுரை

கொழும்பு,செப்.13

"இடைக்காலத் தன்னாட்சி அதிகார உரிமைகளைக்கூட வழங்க முன்வராத அரசு, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எங்கே ஏற்படுத்தப் போகின்றது?

"தமிழர்கள் இந்த நாட்டில் ஏனைய இனங்களை ஆள முயற்சிக்கவில்லை. ஆனால், எங்களை யாரும் அடிமைப்படுத்தி ஆளவிடவும் நாம் தயாரில்லை.

"தமிழர்களை - தமிழ் மண்ணை - தமிழர்களே ஆட்சி செய்யும் உரிமை வழங்கப்பட வேண்டும். அதுவே இங்கு வாழும் ஒட்டுமொத்தமான தமிழர்களினதும் அபிலாஷை. இதை அவர்கள் அடைவதை எந்தச் சக்தியாலும் தடுத்துவிடமுடியாது."

கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான தியாகராஜா மகேஸ்வரன் கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு சூளுரைத்தார்.

அரச, தனியார்துறை ஊழியர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒன்றை முன்னாள் சபாநாயகரும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான மைக்கல் ஜோஸப் பெரேரா சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையாக முன்மொழிந்தார்.

இதனை வழிமொழிந்து பேசிய மகேஸ்வரன் மேலும் கூறியதாவது:-

இந்த அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளித்தே ஆட்சியைக் கைப்பற்றியது.

இன்று ஐந்து மாதங்களும் கடந்து விட்டன. ஒரு சதமேனும் சம்பளமாக வழங்கப்படவில்லை.

இரண்டரை வருடகாலத்தில் நாம் நிரப்பி வைத்த திறைசேரியை - கஜானாவை - ஒரு சில மாதங்களில் காலிசெய்துவிட்டனர்.

வாழ்க்கைச் செலவு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்து விட்டது. அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, குழந்தைகள் பால்மா உட்பட அனைத்தினதும் விலைகளும் நூறுவீதம் அதிகரித்துவிட்டன.

முன்பு ஐந்து சதம் விலை அதிகரித்து விட்டாலும் போஸ்டர்களை ஒட்டி வீதிப் போராட்டம் நடத்திய ஜே.வி.பியினர் இன்று வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருப்பது ஏன்?

அரச ஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் பல மடங்காக அதிகரிக்கப்படவேண்டும்.

கடந்த 20 வருடங்களாகத் தமிழ் மக்கள் மீது யுத்தம் பலாத்காரமாகத் திணிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் யுத்தத்தை விரும்பவில்லை.

சிங்கள அரசுகள் மேற்கொண்ட யுத்தப் பேரழிவால் எமது தமிழ் மக்கள் இருபது வருடங்களாக அகதி முகாம்களில் இருக்கின்றனர்.

பல கோடி ரூபா பெறுமதியான வீடுகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளன. வீடுகள் இருந்தும் மக்கள் அங்கு செல்ல முடியாத நிலை.

### சொந்த மண்ணில் அகதிகளாக...

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எழுபது வீத மக்கள் நிவாரணப் பொருள்களை நம்பியே வாழ்கின்றனர். அவற்றையும் கூட முறையாகப் பெறமுடியவில்லை.

எங்களுடைய சொந்த மண்ணில் நாங்கள் அகதிகளாக வாழும் அவலம் ஏற்பட்டுள்ளது. எங்களுடைய மண் பறிபோகக் கூடாது. அதை அனுமதிக்கவும் மாட்டோம். நாம் மற்றவர்களை அடிமைப்படுத்த முனையவில்லை. எங்களை நாங்களே ஆளும் உரிமையே எமக்கு வேண்டும்.

எங்கள் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. தமிழர்கள் தமது சொந்தக் காணிகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

உங்களுடைய அடக்கியாளும் அதிகார வெறி, தமிழ் இனத்தவர்களை ஆயுதம் ஏந்த வழிவகுத்தது.

ஆனால், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகள் மீதான தடையை நீக்கி யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

இக்காலப் பகுதியில் யுத்தச் செலவினம் நூறு வீதத்தால் குறைக்கப்பட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சலுகைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தி நாட்டின் அபிவிருத்தியில் ஆர்வத்துடன் நாடு ஈடுபட்டது.

ஆனால், அதிகார வெறியாலும் ஆட்சி மீதான அவாவினாலும் ஜனாதிபதி பெரும்பான்மை கொண்ட அரசைக் கவிழ்த்தார்.

அரசியலை விட்டுப் போக விருப்பம் இல்லாத ஜனாதிபதி மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தி சாதனை படைத்தார்.

குடும்ப ஆதிக்கம் போய்விடக்கூடாது என்ற வெறியில் மார்ச் மாதம் மீண்டும் ஒரு தேர்தலை நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தனது சுயநலத்திற்காக நாட்டின் நிதியில் முன்னூறு கோடி ரூபாவை அவர் ஏப்பம் விட்டுள்ளார்.

சர்வதேச சமூகம் இன்றைய அரசின் உண்மையான நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிந்து கொண்டுவிட்டது. அதனால், சரியான வகையில் காய்நகர்த்த அது ஆரம்பித்துவிட்டது.

சமாதானம் இல்லாவிட்டால் உதவிகளும் இல்லை என்று கைவிரித்துவிட்டனர்.

ஆனால், சமாதானம் பேசுகின்றோம் என்று போக்குக் காட்டுகின்றது அரசு.

இடைக்கால நிர்வாகத்தைக்கூட வழங்கும் தற்றுணிவு இல்லாதவர்கள் எப்படி நிரந்தரத் தீர்வை வழங்கப் போகின்றனர்?

இன்று தேசிய வருமானத்தைத் திரட்டித் தருவதில் தோட்டத் தொழிலாளர்கள் முழுமையான பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்களுக்கும் தினம் ஐநூறு ரூபா சம்பளம் வழங்க வேண்டும் - என்றார் மகேஸ்வரன் எம்.பி.

(எ-க)

## நல்லூர் கந்தன் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.13

நல்லூர்க்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கை மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் தேர்த்திருவிழாவான இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு ஏ.கே.கருணாகரனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக்காரர்களாக வயலின் - சியாமளாங்கி கருணாகரன், மிருதங்கம் - எம்.சிதம்பரநாதன், கெஞ்சிர - எஸ்.சிவராம், முகர்சிங் - எம்.கஜன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-13)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு வீதியுள்ள ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலயமண்டப அரங்கில் தினமும் மாலை 6 மணிக்கு நடைபெறும் கம்பரமாயானத் தெய்வீகத் தொடர் இசைப்போருரையில் தேர்த்திருவிழாவான இன்று திங்கட்கிழமை சிவ.வை.நித்தியானந்த சர்மா "கும்பகர்ணன் வதம்" எனும் காட்சி பற்றி உரையாற்றுவார். (எ-13)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இந்து கலாசாரத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு மாவை சிவநாதன் பட்டிமன்றக் குழுவினரின் 'வாழ்க்கையில் சைவமென்னும்' தலைப்பிலான சுழலும் சொற்போர் இடம்பெறவுள்ளது. (எ-13)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.13

நல்லூாக் கந்தன் ஆலயப் பெருந்திருழாவை முன்னிட்டு அமெரிக்கத் துறவி சுவாமி தந்திர தேவா நிகழ்த்தும் 'இந்துமதம்' என்ற சொல்லின் அர்த்தம் என்ன? என்ற தலைப்பிலான தொடர் செயற்பொழிவு இன்று மாலை 4 மணிமுதல் 5 மணிவரை நல்லூர் சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-6)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் பெருந்திருவிழாவை ஒட்டி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தேர் உற்சவமான இன்று இடம்பெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ காலை 9 மணி - ஆதீன இசை வகுப்பு மாணவர்களின் பண்ணிசைக்கச்சேரி.

★ 9.30 மணி - திருப்புகழ் ஆராதனை யாழ். இந்து மாணவர்கள்.

★ 10.15 மணி - செல்வி சியாமளாங்கி கருணாரன் - பாட்டு.

★ 11 மணி - திருமதி பார்வதி சிவபாதம் - பாட்டு.

★ 11.45 மணி - திருமதி நந்தினி உதயகுமார்.

★ 12.30 மணி - வி.சிவஞானசேகரம்.

★ 1.15 மணி - திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா.

★ ஆதீன முதல்வரின் ஆசியுடன் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (எ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.13

நல்லூர்க் கந்தன் ஆலய பெருந்திரு விழாவில் தேர்த்திருவிழா தினமான இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலில் விசேட இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (எ-204)

## யாழ். கூட்டுறவுச் சங்க ஊழியருக்கு விடுமுறை

அரியாலை,செப்.13

நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவை முனனிட்டு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று சங்கத் தலைவர் சூ.சிறில் தெரிவித்தார்.

தேர்த்திருவிழாவான திங்கட்கிழமை சங்கத்தின் தலைமை அலுவலகம் மற்றும் கிளைகள் யாவும் பூட்டப்பட்டு பணியாளர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

(எ-17)

## வைத்தியசாலை வீதி புனரமைப்பு

வலி.தென்மேற்கு,செப்.13

அராலி மத்தியிலுள்ள வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு பிரதான வீதியிலிருந்து செல்லும் வீதியைத் திருத்தும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

நீண்டகாலமாக திருத்தப்படாது குண்டும் குழியுமாக இருந்து வந்த இவ்வீதியைத் திருத்துமாறு வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியும், வைத்தியசாலை அபிவிருத்தி சங்கமும் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததையடுத்து இவ்வீதி தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

பிரதேச சபையின் நிதி மூலம் இவ்வீதியின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)

**SAAMSTECH** இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்புகளில்

50% சலுகைக் கட்டணத்துடன் பதிவுசெய்ய

இன்று கடைசி நாள் (13-09-2004)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, மானிப்பாய், சாவகச்சேரி, ஆவரங்கால்,
கோப்பாய், பருத்தித்துறை உட்பட 10இற்கு மேற்பட்ட இடங்களில் வகுப்புகள்.
மேலதிக விவரங்கள்:
யாழ்., கொழும்பு தலைமையகங்களில் அல்லது வகுப்பு நடைபெறும் இடங்களில்.

**SAAMSTECH** 841, Hospital Rd., Jaffna.
T.P.No. 077 - 3068968. (சி-37586) (26-14-16)



## வீடு வாடகைக்கு

உரும்பிராய், பலாலி வீதியில் கற்பகப் பிள்ளையார் கோயிலிலிருந்து 100m தூரத்தில் சகல வசதிகளையும் உடையதும் 5குளியலறைகளுடன் கூடிய 8படுக்கையறைகளுடனும் 2பான்ரி மற்றும் விசாலமான நடுக்கூடத்துடன் வாகன தரிப்பிடம், நிலாமுற்றம் ஆகியவற்றுடன் அமைதியான இடத்தில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. தொழில் முகவர் நிறுவனங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றிற்கு உகந்தது. நேரிலோ தொலைபேசி மூலமோ தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **திருமதி தர்மஜெயசூரியர்**
222 6485. (36349)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆவணித் திங்கள் 30ஆம் நாள் (15.09.2004) புதன்கிழமை பிரதமைத் திதியும் உத்தர நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 11.00 மணிமுதல் 12.03 மணி வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்.

கரம்பைக் குறிச்சி, வரணி
(தற்காலிக முகவரி:
இல.01, கண்டுவில் வீதி,
சாவகச்சேரி) யைச் சேர்ந்த
**திரு.திருமதி சு.அம்பிகைபாகன்**
அவர்களின்
சிரேஷ்ட புத்திரன்
*திருநிறை செல்வன்*
**சிவகுமார்**
அவர்களுக்கும்



வண்ணார்பண்ணை, நரசிமர் கோயிலடி
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
அமரர் முத்துவேலுப் பத்தர் முருகேசுப் பத்தர்
அமரர் இராசுக்குட்டிப் பத்தர்
ஆகியோரின் பேர்த்தியும்
**திரு.திருமதி செ.தங்கராஜா**
அவர்களின் கனிஷ்ட புத்திரியுமான
*திருநிறை செல்வி*
**ஸரஸ்வாகினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயப் புதுமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம்செய்யப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

582, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

வரவேற்பாளர்கள்:
**திரு.செ.தங்கராஜா** (கட்டடப் படவரைஞர்)
**திருமதி த. தவமணி**
**திரு.திருமதி செ.தியாகராஜா - தனலட்சுமி தம்பதிகள்**
**திரு.திருமதி த.சுதாகர் - சோமதி தம்பதிகள்.**

(இதனைத் தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதர வேண்டுகின்றோம்.)

(36344)(26-14-16)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




பாலேந்திரன் - குகப்பிரியை தம்பதிகளின்
செல்வப் புதல்வன் **சர்மிலன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (13.09.2004) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அக்கா, அண்ணா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளுடன் புதுப்பொலிவுடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கும்:
**திரு.திருமதி பாலேந்திரன்.**

சந்நிதி வீதி,
உடுப்பிட்டி.
(36334) (24-14-16-26)



சூரியன் கேட்டால்

# ரூபா 50,000

நாள்தோறும். காலை 07.00 முதல் காலை 10.00 வரை.

சூரியன் FM
SOORIYAN FM

93.0 FM
யாழ்ப்பாணம்

A member of the ABC Radio Network

LEO BURNETT

103.2 கொழும்பு / தெற்கு 93.0 யாழ்ப்பாணம் 97.3 கண்டி / ரஜரட்ட 97.9 நாடு முழுவதும்.



# நல்லூர் கந்தசுவாமி கோயில்

தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 13.09.2004

## சித்தர்களால் பெருமைபெற்ற நல்லூர்

'கோயில்' என்கிறபோது சிதம்பரத்தையே குறித்து நிற்கிறது. அதேபோன்று நம் ஈழ நாட்டிலும் 'நல்லூர்' என்கிறபோது நல்லூர் கந்தசுவாமி கோயிலையே குறித்து நிற்கிறது. இந்தப் புண்ணிய தலத்திலே மகான் ஒருவரின் ஆத்மீகசக்தி உலகம் முழுவதையும் ஈர்த்து நிற்கிறது. கலியுகக் கந்தனான முருகப் பெருமானின் திருவருள் வெள்ளம் அனைத்து ஆன்மாக்களையும் பிரவாகித்து நிற்கின்ற உண்மை பிரசித்தமானது. ஆண்டுதோறும் மகோற்சவ காலங்களில் முருகனை வழிபாடு இயற்ற வரும் அடியார் கூட்டமோ அனந்தம்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பன்னிரண்டு பேருக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். அவர்களுள் ஒருவனாகிய தமிழ் அரசனின் மந்திரி புவனேகபாகு. இந்தப் புவனேகபாகு கட்டிய கோயிலே நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகும். இவர் ஓர் உத்தம அந்தணர். இவருடைய இயற்பெயர் கங்காதரக் குருக்கள். இந்த பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலை கி.பி.1950 இல் கட்டினார் என்பது வரலாறு.

நல்லைக் கந்தன் ஆலயம் 1902ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்று புதுப்பொலிவு பெற்றது. 1899 ஆம் ஆண்டு அழகானதொரு மணிக்கூட்டுக்கோபுரமும் கட்டப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டுவதற்கு நூற்று எழுபது வருடம் முந்தியது கந்தபுராணம்.யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கொள்கை. நாவலர் பெருமான் கந்தபுராண கலாசாரத்தை யாழ்ப்பாணத்தில் நன்கு பரப்பியவர். இதனை நன்கு வளர்த்த பெருமை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களையே சாரும்.

1875 ஆம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டிய வரலாற்றை முதலில் எழுதிய பெருமை ஆறுமுக நாவலரையே சாரும். மேலும் 1911 ஆம் ஆண்டு மட்டுவில் பிரம்ஸ்ரீ.க. ஐயாத்துரை ஐயர் அவர்கள் நல்லைக் கந்தன் பெயரில் திருஊஞ்சல்பதிகம் பாடியுள்ளார். மேலும் ஈழத்துப் பெரும் புலவர்களான உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், சுன்னாகம் முத்துக்குமாரகவிராயர், நல்லூர்கந்தப்பிள்ளை, இருபாலை சேனாதிராஜ முதலியார், வடகோவை அ.சபாபதி நாவலர், நல்லூர் சரவணமுத்துப்புலவர், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் சரவணை ஆ. தில்லைநாதப் புலவர், நல்லூர் பரமானந்தப் புலவர், கொக்குவில் சபாரத்தினம் முதலியார், உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை போன்ற பல தமிழ் மூதறிஞர்கள். எல்லோரும் நல்லைத் திருமுருகன் புகழ்பாடி வழிபாடு இயற்றி உள்ளனர். இதே போன்று அன்றைய தலைமுறையைச் சார்ந்த பெரும் புலவர்களும் நல்லை முருகன் மீது பாமாலை சாத்திப் பாடியுள்ளார்கள்.

**கா.சிவபாலன்**

சித்தர் பரம்பரையின் ஒளிவிளக்காகத் திகழும் கடையிற் சுவாமியின் வழிவந்த செல்லப்பா சுவாமிகளும், யோகர் சுவாமிகளும் நல்லைமுருகன் மீது ஞானஒளிப் பாடல்களை நல்லூரான் திருவடியில் சமர்ப்பித்திருக்கின்றார்கள். யோகர் சுவாமியின நற்சிந்தனைப் பாடல்கள் அடியார்களின் நாவில் இன்றும் ஒலித்த வண்ணமாக இருப்பதைக் காணலாம்.

பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான இறைவனின் அழித்தல் தொழிலைப்புரியும் நல்லை முருகப் பெருமானின் இரதோற்சவம் அடியார்களை நல்வழிப்படுத்தி அனைத்து மேன்மையையும் பெற கலியுகக் கந்தன் ஆகிய நல்லைத் திருமுருகனைப் பிரார்த்திப்போமாக.



### சேவடியே துணை நமக்கு!

என்ன புண்ணியம் செய்தேன்
உன்தன் எழில் காண முருகா!
என்ன புண்ணியம்...

கண்ணுக்குள் நின்றாடும்
கனக வேலைக்கான முருகா!
என்ன புண்ணியம் ....

நல்லைப்பதி முருகா
நலிந்தோரைக்
காத்தருளும் ஞானக்குமரா!
அல்லும்பகலும் அனவரதமும்
உன்தன் சேவடியே துணை
நமக்கு- முருகா
என்ன புண்ணியம்

ஆவரங்கால் மாருதி.


வள்ளி தெய்வானையுடன் தேரினில் வலம் வரும் முருகா
அடியவர் நலம் காக்க அருள்வாய் அப்பனே! முருகா!

**சிறிகருமாரி நகையகம்**

177D, கஸ்தூரியார் வீதி (வின்சர்தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

★ காலத்திற்கேற்ப நகை வடிவமைப்பாளர்கள்.
★ தரத்திற்கும் உறுதிக்கும் நம்பிக்கை வாய்ந்தவர்கள்.
★ அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சிறிகருமாரி நகையகம்

(C/37600)





நல்லை நகர் கந்தா நாம்போற்றும் வேலவா
நம் மக்கள் குறைதீர்க்க தேரேறி வாரும்ஜயா

குளிர்சாதன, குளிரூட்டி
உதிரிப்பாகங்கள்
மற்றும் குளிர்சாதன Gas
விற்பனையாளர்கள்

**சயிராம் வர்த்தக நிறுவனம்**

101. பலாலி வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே: 0712 324846

(C/37157)



"நல்லூர்ப்பதி வளரும் குகனே சண்முகனே

அசல் 22 கரட்
தங்கநகைகளை
ஒழுங்கு,
உத்தரவாதத்துடன்
நவீன அழகிய
டிசைன்களில்



**அகிலன் நகை மாடம்**

(C/37156)

240, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நின் அருள் நாடி வந்தோம்! முருகா!

**நியூ ராகம்ஸ்** பட்டுச்சோலை

New Ragams Padducholai
Specialist in
Salvar, Saree, Shirting & Suiting.
No, 24,7,8,Modern Market inside. Jaffna.

(C/37595)



வருக! வருக! முருகா!
அனைவருக்கும்
அருள்பாலிக்க இன்று தேரேறி

★ புதிய வடிவமைப்பில் நவீன கண்ணாடிகளைப் பெற்றிட...
★ முக அமைப்பிற்கேற்ப சங்குப் பற்களைப் பொருத்திட...
★ மிதப்புப் பற்களுக்குக் கிளிப் பொருத்திக்கொண்டிட கைதேர்ந்த



**எரிக் கணேஷ்**

பல்கட்டுமிடமும், மூக்குக் கண்ணாடி அகமும்

இல.: 564.566. ஆஸ்பத்திரி வீதி. கிளைகள்: சுன்னாகம்

(C/37596)



தேருலா வரும் திருமுருகா! தீரும் ஐயா
எம் துயரை
அனைவருக்கும் அருள்பாலிக்க
வேண்டிநிற்கும் சேலைகளின் சோலை



**இளவரசி சேலைச் சோலை**

பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்யம்
முகூர்த்தப் பட்டுப் புடைவைகள் மற்றும்
அனைத்து ரக ஆடைத்தினுசுகளுக்கும்

57, நவீன சந்தை , யாழ்ப்பாணம்.
தொ.பே: 2503

(C/37594)



இன்று தேரேறி வரும் முருகா! குறைவின்றி
அருள்வாய் நிறைவாழ்விற்காய்

உங்கள் தேவைக்கு..... எங்களிடம்....

★ ஆங்கில மருந்து வகைகள்
★ பால்மா, பிஸ்கட் வகைகள்
★ பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாச புத்தகங்கள்
★ பென்சில், பேனா மற்றும் மாணவர் உபகரணப் பொருள்கள்
★ அழகுசாதனப் பொருள்கள்

அனைத்தையும் ஓரிடமாகவே பெற்றிட

**பிரபா பார்மஸி அன் குறோசரீஸ்**

இல.: 315, ஸ்ரான்லி வீதி,
(நாகவிகாரை அருகில்) யாழ்ப்பாணம்.

(C/32517)



**துர்க்கா நகைப் பூங்கா**



துன்பங்கள் துடைத்து எம் அன்பர்கள் அனைவரும்
அமைதிநிலை பெற்று வாழ்ந்திட அருள்வாய் முருகா!
ஆறுதல் அளிப்பாய் அப்பனே! எக்காலமும் மாற்றிடு இல்லாத
நவீன மோஸ்தர்களில், உங்கள் விருப்பத்திற்குரிய தங்க
நகைகளைப் பெற்றிட நாடுங்கள்!"

**துர்க்கா நகைப்பூங்கா**

71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/37587)

ஓடர்நகைகளைக் குறித்த தவணையில் அசல் 22 கரட்டில்,
உத்தரவாதத்துடன் செய்து கொடுப்பவர்கள்.

# MOON BEAUTY CARE இன்

அழகுக்கலைப் பயிற்சிகளும் சிகிச்சைமுறைகளும்

Advance Diploma களுக்குப் புறம்பாகப் பின்வருவன Certificate Course ஆக நடைபெறும்.

காலம்: ஒரு மாதம்

I.` Facials and Face Hair
(Galuvanic, High frequency உட்பட 20 வகையான முறைகளில்)

II. Hair Care
(30 வகையான Hair Styles உடன் Straitening, Perming & Curling, Dying, Dandruff, Dull hair Treatment உட்பட)

III. Bride Dressing & Make up

| | |
|---|---|
| 1. Hindu | Oil Makeup |
| 2. Christian | Normal |
| 3. Sinhalese | Stich |
| 4. Gujarathy | Dance |
| | Film |

பயில விரும்புவோர் 18.09.2004இற்கு முன் என்னுடன் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு: **திருமதி B.அகிலா**
(நடன ஆசிரியையும் அழகுக்கலைப் பயிற்றுநரும்)
☎ 0777 570138

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களில் பயிற்சிகள் இடம்பெறும்.


(36330) (24-14-16)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.

### E.K.இராஜேஸ்வரன்

(கணக்காளர், உயர் தொழில்நுட்பக் கல்லூரி)



இவர் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். இவர் மேலும் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று இவரின் சேவைகள் தொடர பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**பிரியா காமென்ஸ் ஊழியர்கள்**
வளாக வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(36354)(32-14-16-24)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 06 - 1946



மறைவு 13 - 09 - 2003

### திருமதி மேரி ஞானறோஸ் ஜெயரத்தினம்

"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது." *(- சங். 34-10)*

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

அன்புடன் நினைவு கூரும்:
**குடும்பத்தினர்.**

(36233) (38-14-16-24)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு சுந்தரமூர்த்தி (பப்பா)



கோட்டைக்காடு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அளவாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சுந்தரமூர்த்தி (பப்பா) அவர்கள் 11.09.2004 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - சின்னம்மா தம்பதிகளின் மகனும் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடேசன், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனராணி, இந்திராணி இராசநாயகம், Dr.ரூபராணி, பிறேமராணி, ஸ்ரீகாந்தா, நவராணி, இராசவரோதயம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தவனேசன் மற்றும் இராசலிங்கம், சாந்தி, ஜெயக்குமார் (கணக்காளர்), ஜெகதாசன், ஈஸ்வரி, Dr.சுந்தரேஸ்வரன், வேணி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீபன், பிரதாபன், திலீபன், நிரூபன், நிரூஜா, சுகிர்தா, இராகவன், கேசவன், மயூரன், ஜனனி, சுஜந்தன், செந்தூர், எட்வின், துஷ்யந்தன், துஷ்யந்தி, பார்த்தீபன், மாதங்கி, ஆரபி, சர்மிலன், சுகண்யன், மதுராங்கி, சுபாங்கன், அன்ஜெயராம், தனுராம் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் இராசரத்தினம் சடாச்சரலிங்கம் (லிங்கம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2004) செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். ,

*அளவாவோடை,*
*சுன்னாகம்.*

தகவல்:
இராசநாயகம் (மகன்).

(36353) (38-14-16-24)

## பேராயர் ஜெபநேசனின் 'பழையதும் புதியதும்' நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.13

தென்னிந்தியத்திருச்சபை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் எழுதிய 'பழையதும் புதியதும்' என்ற நூலின் வெளியீடு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி பிரிவு மண்டபத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா.மோகன், செந்தமிழ்க்கல்லூரி மதுரை பல்கலைக்கழகப் பேராசிரியை கலாநிதி திருமதி நிர்மலா மோகன் ஆகியோர் கலந்துகொள்வர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து அறிமுகவுரையைக் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும், வெளியீட்டுரையைப் பேராசிரியர் இரா.மோகனும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து முதற்பிரதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் பெற்றுக்கொள்வார்.

நயப்புரையை பேராசிரியை கலாநிதி நிர்மலா மோகனும், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸும், பதிலுரையைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனும் நிகழ்த்துவர். (எ-204)

## சிறப்புற நடைபெற்ற விழிப்புணர்வுச் செயலமர்வு

வடமராட்சி,செப்.13

வடமராட்சிக் கிழக்கில் குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் பெற்றோர் விழிப்புணர்வுச் செயலமர்வும் கண்காட்சியும் நடத்தப்பட்டன.

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 125 ஆசிரியர்களின் உதவியுடன் மருதங்கேணிக் கல்விக் கோட்டத்திலுள்ள 5 பாடசாலைகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் மிக ஆர்வத்துடன் இச்செயலமர்விலும் கண்காட்சியிலும் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியையும், செயலமர்வையும் மாகாணக கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையிலான அணியினர் மேற்கொண்டிருந்தனர். (எ-173)

## நெடுந்தீவுக்கான சமுத்திராதேவி படகு மீண்டும் சேவையில்

நெடுந்தீவு,செப்.12

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருத்த வேலைகளுக்காக நீர்கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்ட நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 'சமுத்திராதேவி' என்னும் பயணிகள் படகு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

(எ-112)

## இருளில் மூழ்கியிருக்கும் நெடுந்தீவு பிரதான வீதி

நெடுந்தீவு,செப்.13

நெடுந்தீவுப் பகுதிக்கான மின் விநியோகத்தினை மின்சார சபையினர் பொறுப்பேற்று பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை பிரதான வீதிக்கு மின்விளக்குகள் பொருத்தப்படவில்லை.

இதனால், இரவு வேளைகளில் மேற்படி வீதியால் பயணிக்கும் பாதசாரிகள் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான வீதியில் குறிப்பிட்ட தூரம் வரை விஸ்தரிக்கப்பட்டிருக்கும் மின் இணைப்பினால் பிரதான வீதிக்கு அருகில உள்ள வீடுகளுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்படுவதாகவும் - ஏனைய சிறு வீதிகளுக்கோ அல்லது அவ்வீதிகளை அண்டிய குடியிருப்புகளுக்கோ இதுவரை முழுமையாக மின் இணைப்பு விஸ்தரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
(எ-112)

## மாடிக் கட்டடத்துக்கு இன்று அடிக்கல்

குடத்தனை,செப்.13

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் 60 லட்சம் ரூபா செலவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் அமையவிருக்கும் மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் நெதர்லாந்துத் தூதுவர் தாசன் த.பிளாங்காட் அம்மையார் அடிக்கல்லை நட்டுவைப்பார்.(எ-3-78)


### கார் விற்பனைக்கு

★ ரொயாட்டா கொரில்லா கார் 11 ஸ்ரீ விற்பனைக்குண்டு. (விரும்பின் மோட்டார் சைக்கிளுக்கு மாற்றலாம்)
★ எல்வ் (150) Townase பெட்டியும் விற்பனைக்கு உண்டு.

ந.சற்குணராசா
தொடர்பு :-T.P.: 021 222 7218

(36351) (38-14-16-24)



## வேலை வாய்ப்பு

# Com City

**A member of Dream Solutions (Pvt.) Ltd.**

எமது நிறுவனம் யாழ். நகரில் ஆரம்பிக்கவுள்ள புதிய கிளையில் பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் சேர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இம்மாதம் 15ஆம் திகதிமுதல் 20ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அலுவலக நேரத்தில் நேரில் கையளிக்க வேண்டும்.

1. Managers
2. Accountant
3. Marketing Officers
4. Part time Marketing Reps.
5. Sales Man / Woman
6. Receptionist
7. Telephone Operator
8. Software Developers
9. Multimedia Designer
10. Web Designer
11. Graphics Designer
12. Type Setters
13. Hardware Technicians
14. Office Assistant
15. Translator

★ ஆண் / பெண்இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★ விண்ணப்பத்தில் பதிவுக்கான இலக்கத்தையும் தவறாது குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும்:
**மனிதவள முகாமையாளர்,**
**Dream Solutions (Pvt.) Ltd.**
என முகவரியிடப்பட வேண்டும்.

**COM CITY** A member of Dream solutions (Pvt.) Ltd.
**181, Navalar Road, Jaffna.**

(C/37627)(15-14-16-24)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 08 1921



மறைவு 26 08 2003

### அமரர் அப்பாப்பிள்ளை தியாகராசா

திதி:13.09.2004 திங்கட்கிழமை சதுர்த்தசி

திதி வெண்பா

சுபசுபானு திகழ் ஆவணித் திங்கள்
அபரபக்கச் சதுர்த்தசி புனிதநாள் - திருமிகு
தியாக ராசா தியாக ராசன்
பதமலரைச் சேர்ந்தான் பணிந்து.

ஆண்டொன்று சென்றாலும் என்றும் நாம் உம் நினைவாகவே வாழ்கின்றோம். எங்கள் குடும்பத் தலைவராகவே என்றும் வாழ்வீராக!

*பண்ணாகம் தெற்கு,*
*சுழிபுரம்.*

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-37632)(32-14-16-24)

## 31ஆம் நாள் நினைவலைகள்

ஓரடி மண்ணில் 23 - 06 - 1973



ஆறடி மண்ணில் 14 - 08 - 2004

### அமரர் இராசரெத்தினம் கேசவன் (சண்டி)

(உப தலைவர் - யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்)

திதி: 13-09-2004

ஊரழுது நிற்கையில் எங்ஙனம் சென்றீர்?
ஊருக்கு உழைத்த உத்தமனே!
எல்லோர்க்கும் நல்லவனாய்
வல்லவனாய் வாழ்ந்து
எல்லோர் மனங்களையும் சிதறடித்து
கல்லானாயா.... எம் தெய்வமே......
உமதாத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

இன்று (13-09-2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*செல்வ விலாஸ்,*
*கம்பர்மலை,*
*வல்வெட்டித்துறை.*

**- குடும்பத்தினர்.**

(சி-37634) (26-14-16-24)

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் -2004



அரைச்சதம் பெற்ற விக்ரம் சோலங்கி.

## கென்ய அணியுடனான போட்டியில் இந்திய அணிக்கு அபார வெற்றி

லண்டன்,செப்.13

மினி உலகக் கிண்ணப்போட்டியில் நேற்றுமுன்தினம் இந்திய - கென்ய அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் இந்திய அணி 98 ஓட்டங்களினால் வெற்றியீட்டியுள்ளது.

இந்தப்போட்டியில் வெற்றியீட்டினால் அதே உதவேகத்துடனும் மன உறுதியுடனும் விளையாடி பாகிஸ்தான் அணியையும் வெற்றியீட்ட முடியும் என்ற நிலையில் இருந்த இந்திய அணி கெனய அணியை இலகுவாக வெற்றிகொண்டு விட்டது.

அணித்தலைவர் சௌரவ்கங்குலி நீண்ட காலத்தின் பின்னர் தனது துடுப்பாட்டத்தினை வெளிப்படுத்தி வருவது இந்தப் போட்டியின போதும் உறுதியாகிவிட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய இவர், 90 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 8 பவுண்டரிகளும் அடங்கும். இவரைப்போன்று லக்ஸ்மனும் நீண்ட காலத்தின் பின்பு தனது திறனை வெளிப்படுத்தினார். இவர் பெற்ற ஓட்டங்கள் 79. முகமட் கைப் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், ட்ராவிட் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர். இதனால், இந்திய அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 290 ஓட்டங்களைப் பெற்றது.



டெரன்கௌவ்வைப் பாராட்டும் சகவீரர்கள்.

கென்ய அணியின் சார்பில் பந்துவீச்சில் ரி.எம்.ஒடயோ 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தொடர்ந்து களமிறங்கிய கென்ய அணியின் விக்கெட்டுக்கள் மளமளவென்று சரியத்தொடங்கின. இதனால், 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 74 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அணி தடுமாறியது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ரவீந்துஷா 33 ஓட்டங்களைப் பெற்றார். பின்னர் ஜோடி சேர்ந்த ஓமாவும் பிறிஞ்சால் பட்டேலும் மிகவும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். இவர்கள் இருவரும் தமக்கிடையே 100 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். இதனால், 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது கென்ய அணி. ஓமா 49 ஓட்டங்களையும் பிறிஞ்சால்பட்டேல் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பில் ஹர்பஜன்சிங் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் , இர்பான் பதான் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கங்குலி தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்று மழையின் காரணமாகக் கைவிடப்பட்ட இங்கிலாந்து-சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டி நேற்றுமுன்தினம் தொடர்ந்து நடைபெற்றதை அடுத்து இங்கிலாந்து அணி 152 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.


அணியின் சார்பில் போல்கொலிங்வூட் 80 ஓட்டங்களையும் விக்ரம் சோலங்கி 62 ஓட்டங்களையும் ஜோன்ஸ் 38 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் சிம்பாப்வே அணியின் சார்பில் டக்ளஸ் ஹொண்டோ 66 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் றெயின் போட் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து களமிறங்கிய சிம்ப்பாப்வே அணி 39 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

அணித்தலைவர் தைபு 40 ஓட்டங்களையும் சிக்கும்பற 42 ஓட்டங்களையும் சிபந்தா 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணியின் ஹார்மிசன் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பிளிண்டொப் 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் டெரன்கௌவ்24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஆஷ்லி கில்ஸ் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

இதுவரை நடைபெற்று முடிந்த போட்டிகளில் இந்தியா, இங்கிலாநது, நியுஸிலாந்து ஆகிய அணிகள் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளன. (10)


விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் ஹார்மிஸன்.

## மினி உலகக் கிண்ணத்தை அவுஸ்ரேலியா நிச்சயம் கைப்பற்றும் - புச்சானன்

லண்டன்,செப்.13

ஆஸ்திரேலிய அணி இம்முறை மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன் புச்சானன் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது முழுப் பலத்துடன் உள்ள ஆஸ்திரேலிய அணி இதுவரை நடைபெற்று முடிந்த 3 மினி உலகக் கிண்ணப் போட்டிகளிலும் கிண்ணத்தைக் கைப்பற்றவில்லை என்றும் இம்முறை நிச்சயம் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்று அமெரிக்க அணியுடன் மோதவுள்ள ஆஸ்திரேலிய அணி இலகுவாக வெற்றியீட்டும் எனவும் அமெரிக்க அணியுடன் மோதுவது சுவாரஸ்யமானது எனவும் புச்சானன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் இதுவரையில் 21 நாள் போட்டிகளில் விளையாடியுள்ள ஆஸ்திரேலிய அணி, 16 போட்டிகளில் வெற்றியும் 3 போட்டிகளில் தோல்வியும் அடைந்துள்ளது. 2 போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. தோல்வியுற்ற 3 போட்டிகளில் 2 போட்டிகள் இலங்கை அணியுடனும் ஒரு போட்டி இந்திய அணியுடனும் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

### இன்றைய போட்டி

**ஆஸ்திரேலியா எதிர் அமெரிக்கா**



இந்திய அணியின் பதானும் விக்கெட் காப்பாளர் தினேஸ்கார்த்திக்கும்.


விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் ஹர்பஜன்சிங்


## மீள்பார்வை

— வைஷாலி —

முதலாவது மினி உலக் கிண்ணப் போட்டி 1998 ஆம் ஆண்டு பங்களாதேஷ் நாட்டின் தலைநகரான டாக்காவில் நடைபெற்றது. இந்தப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியை இந்திய அணி 44 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இதில சச்சின் டெண்டுல்கர் 141 ஓட்டங்களை எடுத்தார். இதில் 13 பவுண்டரிகளும், 3சிக்ஸர்களும் அடங்கும்.

3 ஓவர்களில் 2விக்கெட்டுக்களை இழந்து 8 ஓட்டங்களை மாத்திரம் எடுத்திருந்த இந்திய அணி, 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களை எடுத்திருந்தது. 308 ஓட்டங்கள் எடுக்கவேண்டிய ஆஸ்திரேலிய அணி, 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 263 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. டெண்டுல்கர், 4விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருநதார்.

அரையிறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சந்தித்த இந்தியஅணி, 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 242 ஓட்டங்களை எடுத்தது. இதற்குப் பதிலளித்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 47 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 247 ஓட்டங்களைப்பெற்று வெற்றியீட்டியது. இந்திய அணியின் தோல்விக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மேர்வின் டிலானின் பந்து வீச்சே பிரதானமான காரணமாக அமைந்தது. முதலாவது மினி உலகக கிண்ணப் போட்டியில் அரையிறுதி ஆட்டத்தில் தோல்வி. இரண்டாவது மினி உலகக் கிண்ணப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் தோல்வி. மூன்றாவது மினி உலகக் கிண்ணப்போட்டியில் சம்பியன் கிண்ணத்தை இலங்கை அணியுடன் பகிர்ந்து கொண்ட அணியாக உள்ள அணியே இந்திய அணி. இம்முறை கிண்ணத்தை அது வெல்லுமா?


கென்ய வீரர் ஓமாவின் விக்கெட்டை பிடியெடுக்க முற்படும் தினேஸ்கார்த்திக்.


சிம்பாப்வே வீரரின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் பிளிண்டொப்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

14-8XXX இலக்க டொயாடா கரீனா (நல்ல நிலையில்) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 628, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (நாச்சிமார் கோயில் தேர்முட்டிக்குப் பின்புறம்). T.P.: 021 - 4590955, 0777 - 267027. (36343)

நல்ல நிலையிலுள்ள Hero Honda Street - 100 C.C. மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 251/1, பருத்தித்துறை வீதி, நல்லூர் (மெடி எயிட்ஸ் வைத்தியசாலைக்கு அருகில்). T.P.: 0777 - 238361. (36355)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரசடி வீதி, கந்தர்மடத்தில் 2½ பரப்புக் காணியில் 4 அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 115/1, அரசடி வீதி (யூனிவேர்சல் ரியூட்டரி இருந்த ஒழுங்கை), கந்தர் மடம், யாழ்ப்பாணம். (36320)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler 35/= மற்றும் Prima Layer Brown/White குஞ்சுகள் 50/= 13.09.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi farm வட்டுக்கோட்டை, நியூ R.S.K .Farm, உடுவில், சாவகச்சேரி முருகனிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (36057)

## தவறிவிட்டது

புஸ்பராசா உதயகுமார் என்பவரது அடையாள அட்டை (இல.691250733V) இம்மாதம் பத்தாம திகதி முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் பணிமனையில் அல்லது 55, 57, ஸ்ரான்லி வீதி, சிற்றிகாட்வேயார், இலங்கை வங்கிக்கு முன்பாக ஒப்படைத்துதவவும். (சி-37635)

04-09-2004 அன்று யாழ்ப்பாணத்திற்கும் முகமாலைக்குமிடையில் தனியார் பஸ்ஸில் பயணிக்கையில் எனது ரவலிங் பாக் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து R.மரியம்மா, 19, ஓடக்கரை வீதி, குருநகர் எனும் விலாசத்திற்கு ஒப்படைக்கவும். (36363)

## மணமகன் தேவை

யாழ் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968இல பிறந்த, அத்தம் நட்சத்திர ஆசிரியைக்கு B.A. (Dip.in Ed.) அரசாங்க/அரச கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2370, C/o உதயன், யாழ்ப்பாணம். (36243)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்நத, 1971 புனர்பூச நட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாய் தோஷமுள்ள, படித்த மணமகளுக்கு ஏற்ற மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: கார்த்திகேசு. T.P.: 077 - 6653323. (36362)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969ஆம் ஆண்டு, பரணி 3ஆம் பாதம், ஜேர்மனி P.R. கிடைத்த மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. மணமகன் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். ஜாதகத்துடன் உடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 2373, மே/பா உதயன். (36348)

லண்டன் - 29 வயது, கனடா - 30 வயது, U.S.A. - 32 வயது, ஆஸ்திரேலியா - 31 வயது மணமகன்கள் நல்லூர் முருகன் உற்சவ விழாவுககு நிற்கிறார்கள். யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சார்ந்தவர்கள். தொடர்பு: நல்லூர் மணியம், 82/2/1, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13, 346/1/1/1 காலி வீதி, வெள்ளவத்தை. T.P.: 0112 - 360607, 0112 - 381299, Fax: 0114 - 610815. (சி-37630)

33 வயதிற்குட்பட்ட படித்த மணமகள் தேவை. போட்டோ பிரதியுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: வி.இ. 2376, மே/பா உதயன். (36364)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1960, உத்தரம் 2ஆம் பாதம், செவ்வாய்க் குற்ற மற்ற, பிரபல தொழிலதிபருக்கும் 1974ஆம் ஆண்டு, கேட்டை 2ஆம் பாதம், 2இல் செவ்வாய் உடைய, அரச உயர்பதவி வகிக்கும் மணமகனுக்கும் மணப்பெண்கள் தேவை. தொடர்பு: T.P.: 077 - 6921. (36305)


**SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு**

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.

**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna.
Phone: 0773068968.
(சி-37511)

**இணைய, இணையத்துள சேவை**

.com .net .org .info
Doman Registration Rs.400/= per Year
Hosting upto Rs.2000/= per year
Limited time offer
**SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.**
**T.P.: 0773 068968.** (சி-37510)


## நிர்வாக அங்கத்தவர்களை புகைப்படம் எடுத்தல்

சமூகவியல், சமூக நிர்வாக உறுப்பினர்களுக்கான புகைப்படம் எடுக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை 14.09.2004 பிற்பகல் 4மணிக்கு இடம்பெறும். தவறாது சமுகமளிக்கவும்.

சமூகவியல் சமூகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(36360)(32)

## சிறிய தேர் அன்பளிப்பு

பொலிகண்டி கந்தவனம் கந்தசுவாமி கோயிலுக்கு சிறிய தேர் ஒன்று இரண்டாம திருவிழா உபயகாரா களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மற்றும் விசேட உற்சவ தினங்களில் சுவாமி உள்வீதி வலமாக எடுத்துவரப்படும்போது இப்புதிய தேரில் வைத்து வீதி உலா இடம்பெறும். (4-173)

## வேலணை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்

வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு கடந்தவாரம் புதிய அம்புலன்ஸ் ஒன்று யாழ்.சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் 'நீர்ப்' திட்டத்தின் கீழ் யாழ் .சுகாதாரத் திணைக்களத்திற்குக் கிடைத்த அம்புலன்ஸ்களில் ஒன்றே இவ்வாறு வேலணை அரசினர்வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

இவ்அம்புலனஸை வைத்தியசாலை வளவில் நிறுத்தி வைப்பதற்கான கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கேரி. சிவபாதம் நடவடிக்கைஎடுத்துள்ளார்.

இதேவேளை, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய வைத்தியசாலைகளிலிருந்து கடல்மார்க்கமாக அம்புலன்ஸ் படகு மூலம் புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்திற்கு எடுத்துவரப்படும் அவசர நோயாளாகளைச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கும் இந்தப் புதிய அமபுலன்ஸ் பயன்படுத்தப்படுமென வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஆதிரு நாவுக்கரசு தெரிவித்தார். (எ-135)

## சாயி சேவா நிலையத்தில் 19ஆம் திகதி இரத்ததானம்

யாழ்ப்பாணம், செப்.13

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட உலகளாவிய இரத்ததான தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வடபிராந்தியம் முழுவதும் இரத்ததானம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு சேர்பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பகவான் சத்தியசாயி சேவா நிலையத்தில் இரத்ததானம் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-204)

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகிய

**ஆறுமுகம் சந்திரமோகன்**
**(அருள்தாஸ்)**

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வடகடல் நிறுவனம்,
குருநகர், யாழ்ப்பாணம்.
(சி-30639)(30-14-26)

தலைவர்,
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
நிறுவன ஊழியர்கள்.


நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் நடமாட
**அருந்துங்கள்...!**
**அண்ணா கோப்பி**
**நல்லூர் ஆலய - சிவன் கோயிலுக்கு**
அருகிலுள்ள "அண்ணா"
வியாபார நிலையத்தில்
அண்ணா உற்பத்திப் பொருள்களான
* தோசை மா * அப்பம் மா * ஜீவாகாரம் * அரிசிமா
* சரக்குத் தூள் * சொட்டுநீலம்
அடங்கிய பொதியை 100/= ரூபா கொடுத்து வாங்கி நாம் வழங்குகின்ற இனாம் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
(சி-37580)(34-14-26)

**இணையத் தளம் ஊடாக**
**24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது**
WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி
இணைய முகவரி: **WWW.Wtrfm.com**
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).
**உலகத் தமிழர் வானொலியுடன்**
நேரடியாக இணைய.
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)
**உலகத் தமிழர் உறவுப் பாலமாக**
**உலகத் தமிழர் வானொலி**
**ஊடக அனுசரணை: 'உதயன்'**


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 377153 இலிருந்து 3771553 வரை

சீட்டிழுப்பு இல. 1538
திகதி 11.09.2004

**வெற்றி எண்கள்**
**12 17 20 21 36**

போனஸ் எண் **39**

**ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்பட்டுள்ளது**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 15,00,000/- | 15,00,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 | 101 | 10,000/- | 10,10,000/- |
| 3 | 5,365 | 500/- | 26,82,500/- |
| 2 | 89,659 | 20/- | 17,93,180/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 12ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 109,846 | 10/- | 10,98,460/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரு. 89,84,140/-

இந்த புதன்கிழமை ஜக்பொட்
**Rs. 15,00,000/-**

தொடர் இல. 2838889 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 15 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3775668-3-21**
**3779365-8-59**
**3783081-1-06**
**3786674-3-85**
**3778987-4-38**

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் சிறந்த பண்ணையாளர் தெரிவு

வலி.தென்மேற்கு,செப்.13

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் இவ்வருடத்திற்கான சிறந்த பண்ணையாளர் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

ஆடு, மாடு, கோழி வளர்ப்பாளர்கள் மத்தியில் நடத்தப்பட்ட இந்தத் தெரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

மாடு வளர்ப்பில் சிறந்த பண்ணையாளர்களாக முறையே இ.இளமுருகன் (சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்), பொ.இராசகுலேந்திரன் (பண்டத்தரிப்பு), வை. அம்பலவாணர் (சண்டிலிப்பாய்).

ஆடுவளர்ப்பில் சிறந்த பண்ணையாளர்களாக முறையே - க.பாஸ்கரன் (வடலியடைப்பு), செல்வி வை.கதீஜா (தொட்டிலடி), க.பரமேஸ்வரன் (மானிப்பாய்) -

கோழிவளர்ப்பில் சிறந்த பண்ணையாளர்களாக முறையே ப.அருமைநாயகம் (சில்லாலை), திருமதி சி.கௌரி (மாதகல்), க.நாகேஸ்வரன் (இளவாலை) ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பரிசில்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன என்று சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)


**நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு அளப்பரிய அன்பளிப்புகள்**

**Dialog GSM**
Kit தொலைபேசி அட்டைகள்
Sim இணைப்புகள்

வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அன்பளிப்புகள்
செப்ரெம்பர் 13 முதல் செப்ரெம்பர் 15 வரை

வாடிக்கையாளர் வசதிக்காக
நல்லூரில்:

☆ விஜேய் வீடியோ, பருத்தித்துறை வீதி, யாழ்.
☆ ஜெயா பார்மசி, கோயில் முன்பக்கம்
☆ நடன முருகன், பருத்தித்துறை வீதி, யாழ்.
☆ ஜெயா கொமினிக்கேஷன், அரசடி வீதி, (பாரதிசிலை அருகில்)

மேலும் விவரங்களுக்கு:
**SRI MURUGAN**
**TELE COMMUNICATION & AGENCY POST OFFICE**
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P.: 021 - 222 - 5392.
(சி-37621) (26-14)

# மியான்மார், கியூபா, வடகொரியா மீது அமெரிக்கா பொருளாதாரத்தடை விதிப்பு!

மீயான்மார், கியூபா, வடகொரியா ஆகிய நாடுகள் தமது நாட்டவரை நாடு கடத்துவதைத் தடுக்கத் தவறிவிட்டன. அதனால், அந்நாடுகள் மீது சில அமெரிக்க நிதி உதவிகள் தொடர்பாக பொருளாதாரத்தடை விதிக்கின்றேன் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

இது குறித்து வெள்ளைமாளிகை செய்தித் தொடர்பாளர் ஸ்காட் மெக்கல்லன் கூறியதாவது:-

சர்வதேச அளவில் பல்வேறு காரணங்களால் சட்டவிரோத ஆள்கடத்தல் நடக்கிறது. அதைத் தடுக்க மியான்மார், கியூபா, வடகொரியா போன்ற நாடுகள் தவறிவிட்டன. ஜனநாயகத்துக்கு விரோதமாக நடக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க அந்நாடுகள் கடும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் அவற்றின் மீது பொருளாதாரத் தடையை அதிபர் புஷ் அறிவித்துள்ளார். சூடான், வெனிஸ"வலா போன்ற நாடுகளும் ஆள்கடத்தலை ஒடுக்கத் தவறிவிட்டன -என்றார்.

அதேசமயம் பங்காளதேஷ், ஈகுவார் போன்ற நாடுகள் இவ்விடயம் தொடர்பாக அவசர நடவடிக்கை எடுத்துள்ளதை புஷ் வரவேற்றுள்ளார். அந்த நாடுகள் ஆள் கடத்தலை தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளன. அத்துடன், ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்களை கைது செய்து அவர்களை நீதியின் முன் நிறுத்தியுள்ளன. கடத்தப்பட்டவர்களை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க முயற்சி எடுத்துள்ளன என்று அதிபர் புஷ் பாராட்டியுள்ளார்.

இதுபோன்ற நடவடிக்கைகள் சர்வதேச அளவில் ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்களுக்குத் தண்டனை பெற்றுத்தருவதுடன், அப்பாவி மக்களைக் காக்கவும் உதவும். எனினும், இந்தக் கொடூரமான ஆள்கடத்தலைத் தடுக்க மியான்மார், கியூபா, வடகொரியா ஆகிய நாடுகள் தவறிவிட்டன. அதனால், அந்நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்காவின் வெள்ளை மாளிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-க)

## வடகொரியா அணு பரிசோதனை; அமெரிக்கா குற்றச்சாட்டு!

நியூயோர்க்,செப்.13

வடகொரியா அதன் முதலாவது அணு ஆயுதத்தைப் பரீட்சிக்கத் தயாராகி வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்க புலனாய்வுத்துறை அந்நாட்டு அதிபர் புஷ் நிர்வாகத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையில் இதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடகொரியாவின் அண்மைய நடவடிக்கைகள் வெள்ளை மாளிகைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வுத்துறையினரின் அறிக்கையை ஆராய்ந்த சிரேஷ்ட விஞ்ஞானி ஒருவர் அணு ஆயுதத்திற்கான ஆதாரங்கள் கவலை தரக்கூடியதாக அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் இந்த அணு ஆயுதப் பரிசோதனை வெற்றியளித்தால் ஆசியப் பிராந்தியத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடிய நிலையை அது ஏற்படுத்தும் என அவதானிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

(ஐ-க)

## ஈராக்கின் தலைநகரில் சண்டை நால்வர் பலி; 45 பேர் படுகாயம்!

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் நேற்றுக்காலை பெரும் சண்டை இடம்பெற்றது. இதில் குண்டுத்தாக்குதல்களும் துப்பாக்கி சமரும் இடம்பெற்றன. இதனால், அப்பகுதியே அதிர்ந்தது.

இச் சண்டையில் குறைந்தது நான்கு பேர் கொல்லப்பட்டனர். மேலும் 45 பேர் வரை படுகாயமடைந்தனர் என ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கப் படைக்குச் சொந்தமான இராணுவ வாகனம் ஒன்று இதன்போது தீப்பற்றி எரிந்தது. இந்தச் சண்டை ஈராக் இடைக்கால அரசின் தலைமை அலுவலகமும் அமெரிக்கா உட்பட வெளிநாட்டுத் தூதரகங்களும் அமைந்துள்ள 'கிரீன்சூன்' கட்டடத்திற்கு சற்றுத் தூரத்திலேயே இடம்பெற்றுள்ளது.

பக்தாத்திலுள்ள தைக்கிரிஸ்ட் நதியின் மேற்குப் பகுதியில் அதிகாலை 5 மணியளவில் இச் சண்டை இடம்பெற்றது என செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சண்டையின் போது தொடராக துப்பாக்கிச் சத்தங்கள் மூன்று மணித்தியாலங்களாக கேட்டன.ரொக்கெட் மற்றும் மோட்டார் தாக்குதல் சத்தங்களும் அதிகாலை வேளையில் கேட்டன. 'கிரீன்சூன்' கட்டடத்தின் மேற்பக்கத்தில் கறுப்பு புகை மண்டலம் வான் நோக்கி எழுந்தது. சண்டை நடந்த பகுதியில் சுற்று வட்டாரத்தில் புகை மூட்டமாய் இருந்தது என்று சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க போர் வாகனம் தீப் பற்றியதில் 4 சிப்பாய்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். சண்டையின் போது அமெரிக்க ஹெலிகொப்டர்கள் சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

ஈராக்கில் தொடரும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர முடியாமல் இடைக்கால அரசு திண்டாடுகிறது.

இதேவேளை -

இன்னொரு இடத்தில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் ஒரு பொலீஸ் அதிகாரி கொல்லப்பட்டார். பொலீஸாரின் பெற்றோல் நிரப்பும் இடத்தை குறிவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ஐ-க)

## ஈராக்கிலும் சவூதியிலும் கார்க்குண்டு வெடிப்புகள்!

லண்டன்,செப்.13

ஈராக்கிலும் சவூதி அரேபியாவிலும் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த இரு கார்க்குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. இதில் ஒருவர் படுகாயமுற்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், காயமுற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்படுகிறது.

உலக அரங்கில்

ஈராக்கில் உள்ள தேவாலயமொன்றில் இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்பில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

பக்தாத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள சபாடேரியின் அட்வெண்டிஸ்ட் தேவாலயத்தின் வெளிப்பகுதியிலேயே இக்கார்க்குண்டு வெடித்துள்ளது. இந்தச் சம்பவத்தினால் தேவாலயத்தின் ஜன்னல்கள் சேதமடைந்துள்ளன.

சவூதி அரேபியாவில் நேற்றுமுன்தினம் ஜித்தாஹ் நகரில் உள்ள அமெரிக்கன் வங்கிக எதிரேயே கார்க்குண்டு வெடித்தது. காரொன்றில் வந்த நான்கு தீவிரவாதிகள் காரைவிட்டு இறங்கிக் காரை வெடிக்கச் செய்துள்ளனர்.

இதில் ஒருவர் படுகாயமுற்றார். தப்பிக்க முனைந்த தீவிரவாதிகளில் ஒருவர் பொலீஸாரிடம் சிக்கினார். வெடிக்கவைக்கப்பட்ட கார் திருடப்பட்டது என விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

(ஐ-க)

## தோல்வியின் விளிம்பில் அமெரிக்கா உள்ளது அல்-கெய்டா துணைத் தலைவர் தெரிவிப்பு

கெய்ரோ,செப்.13

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா தோல்வியின் விளிம்பிலேயே உள்ளது என ஒஸாமா பின்லேடனின் தளபதி அல்-ஜவாரி தெரிவித்துள்ளார்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த அறுவைச் சிகிச்சை மருத்துவரான அல் -ஜவாரின் பதிவு செய்யப்பட்ட ஒலிப்பேழை பேட்டியை அல் - ஜஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

நியூயோர்க் மற்றும் வாஷிங்ரன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட செப்ரெம்பர் 11 ஆம் திகதி சம்பவத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவை யொட்டி இந்த ஒலிப்பேழை வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஒலிப்பேழையைப் பிரத்தியேகமாகப் பெற்றதாக அல் - ஜஸீராத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

அல் -கெய்டா தீவிரவாத அமைப்பின் தலைமை தொடர்ந்து செயலாற்றலுடன் இருக்கிறது என்பதை அந்த அமைப்பின் ஆதரவாளர்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் இந்த ஒலிப்பேழையின் பேட்டி அமைந்துள்ளது.

அல் - ஜவாரி அந்தப் பேட்டியில் கூறியிருப்பதாவது:-

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்காவின் தோல்வி என்பது எந்த நேரத்திலும் நிகழலாம் என்ற அளவுக்கு நேரத்தைப் பொறுத்ததாக மாறிவிட்டது. அந்த இரு நாடுகளிலும் அமெரிக்கர்கள் இருப்பது கொள்ளியில் சிக்கிக் கொண்டவர்கள் போல் உள்ளனர்.

அங்கேயே தொடர்ந்து இருந்தால் இரத்தம் சிந்தி இறப்பார்கள்; அங்கிருந்து வெளியேறினால் எல்லாவற்றையும் இழப்பார்கள்.

அமெரிக்கர்களுக்குப் பாதுகாப்பு என்பது முடிந்துபோன கதை. ஈராக், ஆப்கானிஸ்தான், பலஸ்தீனத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான கொடுமைகளை அவர்கள் நிறுத்தா விட்டால் இனி ஒருபோதும் அவர்கள் பாதுகாப்பை அனுபவிக்க முடியாது.

அரேபிய தீபகற்பம், எகிப்து, சூடான் உட்பட அரபு உலகையும் இஸ்லாம் உலகையும் சிதறடிக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் திட்டம்-என்றார். (ஐ-க)

## அல்ஜீரிய இராணுவம் துப்பாக்கிச்சூடு ஐந்து தீவிரவாதிகள் உயிரிழந்தனர்!

லண்டன்,செப்.13

அல்ஜீரியவில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஐந்து தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அல்-கெய்டா அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இடம்பெற்ற இராணுவ வாகனம் மீதான தாக்குதலில் ஈடுபட்ட இருவர் இதில் கொல்லப்பட்டுள்ளனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவ வாகனம் தாக்கப்பட்டதில் ஏழு படையினர் கொல்லப்பட்டனர்.

முஸ்லிம் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதில் அல்ஜீரிய இராணுவத்தினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகவே இத்துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### முத்துமாலை சக்திவேல் ஆச்சாரி



78/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட முத்துமாலை சக்திவேல் ஆச்சாரி நேற்று (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரகதாம்பிகையின் அன்புக் கணவரும் செல்வராஜா, இரத்தினசபாபதி, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ராசாத்தி, சரவணமுத்து, லலிதா, சாரதா, அனுராதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிலோஜனா, திலகவதி, ஐயம்பெருமாள், ராணி, கதிரவேல், ஏரம்பமூர்த்தி, ரவீந்திரன் ஆகியோரின் மாமனாரும் நர்மதா, சஜீவன், வித்தியா, சர்மிளா, சந்தீப், சந்தோஷ், சுரேஸ், கணேஸ், சோபனா, சத்தியா, இந்துஜா, மொனிஷா, சந்தியா, ரிஷிகா, பத்மினி, ஸ்ரீராம், சுகேன், ஜனகன், பிரதீபா, சரணியா, அர்ஜீன், தர்ஷனா, சுவாக்யா, ரம்யா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2004) திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*78/5,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (36372)(43-17-18)

தகவல்:
பிள்ளைகள்.

### செல்வி கில்டா நேசமணி சபாபதிப்பிள்ளை (பாப்பா)

**(ஓய்வுபெற்ற தாதியர் விடுதிக்காப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)**

இரங்கூனை (பர்மா) பிறப்பிடமாகவும், அளவெட்டியை வதிவிடமாகவும் கோண்டாவில் கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வி கில்டா நேசமணி சபாபதிப்பிள்ளை (பாப்பா) அவர்கள் நேற்று (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கர்த்தருக்குள் நித்திரையாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி.சபாபதிப்பிள்ளை (அளவெட்டி) தம்பதிகளின் புதல்வியும் மனோன்மணி, இராசமணி, ருக்மணி, காலஞ்சென்ற இராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமரேசு, வண.பிதா சாம்தம்பு, பெண்டிற் அவர்களின் அன்பு மைத்துனியும் கணேந்திரன், சந்திரகுமார், காந்தரூபன், சுகுணா, ஜெயந்திரன் ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும் சுகந்தி, றோகான், சுரேஸ், லக்ஷ்மன் ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் கௌரி, குமாரி, புவனா, பத்மினி, ரவி, பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (14.09.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (பு.நே.) கோண்டாவிலில் நடைபெற்று, அளவெட்டி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இருபாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.* (36357)(43-17-18)

தகவல்:
காந்தன், குமாரி.
சுரேஸ் தம்பு.

## மரண அறிவித்தல்

### றெஸ்மன் பிரதீஸ்

**(புனித ஹென்றியரசர் கல்லூரி - தரம் 11 மாணவன்)**

வலித்தூண்டலைப் பிறப்பிடமாகவும் தற்போது சில்லாலை, சென்.ஜேம்ஸ் வீதியை வதிவிடமாகவும் கொண்ட றெஸ்மன் பிரதீஸ் அவர்கள் நேற்று (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் யேசுதாசன் - மேரிமாகிறேற் ஆகியோரின் அன்பு மகனும் கல்பனா, சுரேஸ், றேகன், பிரசாத் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் நாளை (14.09.2004) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணியளவில் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பண்டத்தரிப்பு புனித யாகப்பர் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சென்.ஜேம்ஸ் வீதி,*
*சில்லாலை.* (36374)(43-17-18)
யேசுதாசன் (சின்னத்துரை)
(தகப்பன்).


நாகம்ஸ் சுன்னாகம்
தனுஷ், சிந்துதுலானி, கருணாஸ், மணிவண்ணன், நடிப்பில்
சுள்ளான்

(சி-36415) காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த
மதுர

பு.நே.:10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிரஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, நக்மா, ரகுவரன் நடித்த
பாட்ஷா

வெள்ளி, சனி, ஞாயிறு. (ரீஸ்ஸ்)
Return To Two Moon Junction (இரவு 8.45 பு.நே)
காட்சிகள்: 11.00, 2.45, 6.00(பு.நே)

# துறைமுகத்தைப் புனரமைக்க முன்பு புலிகளின் கருத்தறிய விருப்பம்

## நெதர்லாந்துத் தூதர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.13

காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள நெதர்லாந்து அரசு விரும்புகிறது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த நெதர்லாந்துத் தூதர் சுசான் த.பிளாங்காட் இத் தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை இங்கு வந்துசேர்ந்த அவர் நண்பகல் யாழ். செயலகத்துக்குச் சென்று அரச அதிபர் செ.பத்மநாதனுடன் பேசினார்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக 'நிகொட்' திட்டத்துக்கு வழங்கப்படும் நிதி மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளின் முன்னேற்றம் ஆகியன தொடர்பாகக் கேட்டறிந்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயப்படுத்த தமது அரசு உதவி வழங்க முடிவு செய்துள்ளது என்றும் இது தொடர்பாக எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்பாகத் திட்ட அறிக்கையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் தூதர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்து மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்கின்றனர். இந்நிலையில் இந்தத் துறைமுகத்தைப் புனரமைப்பதால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. இந்நடவடிக்கையை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையே ஏற்படும் என்று அரச அதிபர் தூதரிடம் சுட்டிக்காட்டினார்.

துறைமுகத்தைப் புனரமைப்பதன் அவசியம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசவிருக்கின்றோம் என்று தூதர் கூறினார். (ஐ-3-6)

# கரம்பனில் கொலையுண்டவர் ஈ.பி.டி.பியின் நிதிப்பொறுப்பாளர்

யாழ்ப்பாணம்,செப்.13

ஊர்காவற்றுறை கரம்பனில் வைத்து நேற்று முன்தினம் மாலை சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர் அருள்தாஸ் என அழைக்கப்படும் மாயவன் சந்திரமோகனின் இறுதிக்கிரியைகள் இன்று ஊர்காவற்றுறையில் இடம்பெறவுள்ளன.

இன்று காலை ஊர்காவற்றுறையில் உள்ள தமது அலுவலகத்தில் அவரது உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரது மறைவை ஒட்டி நேற்று ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகத்தில் சோககீதம் ஒலிபரப்பப்பட்டது. வாழைகள், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன.

இக்கொலை தொடர்பாக ஈ.பி.டி.பி. விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நீண்டகால உறுப்பினரான தோழர் அருள்தாஸ் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கான பாதையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றியவர். வடமராட்சியைச் சேர்ந்த தோழர் அருள்தாஸ் பருத்தித்துறைப் பிரதேச சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அச்சபையின் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியவர். அத்தோடு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டு வடகடல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் செயலாற்றிவந்தவராவார்.

போர்நிறுத்த காலத்திலும்கூட புலிகள் சமாதானம் என்னும் திரைக்குப் பின்னால் இருந்து வழமைபோன்று மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் கொன்றொழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்பதற்கு இப்படுகொலை மேலும் ஓர் எடுத்துக்காட்டாகும். அத்துடன், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் தீவகத்தில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது கொலைச் சம்பவம் இதுவாகும். புலிகளது இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மிக வன்மையாகக் கண்டிப்பதோடு இத்தகைய படுகொலைகளை சமாதானத்தை நேசிக்கும் ஜனநாயக சக்திகள் கண்டிக்க முன்வருவதுடன் மக்களும் தமது மௌனத்தைக் கலைத்து இத்தகைய வன்செயல்களைக் கண்டிக்க முன்வருமாறு இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்று உள்ளது. (ஐ-3)

## நல்லைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்த நாடுகள் பலவற்றில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் இரதோற்சவம் காண்பதற்காக ஏற்கனவே, யாழ்ப்பாணத்தில் திரண்டிருக்கின்றனர்.

ஆலயச் சூழலில் இன்று ஒழுங்கைப் பேணவும் நெரிசலைத் தவிர்க்கவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்றைய தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையிலும் பல தனியார் ஒளி, ஒலிபரப்பு சேவைகளிலும் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளன. ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் பல ஊடக சேவைகளிலும் தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள் ஒலி, ஒளிபரப்புச்செய்யப்படும். (ஐ-3-31-17-173)

## வன்னியிலிருந்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிற்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவிருக்கும் சந்திப்பில் கலந்துகொள்வதற்காகவே இவர் கிளிநொச்சியில் தங்கியிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

கிழக்குத் தளபதிகளுடன் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் பானுவும் மட்டக்களப்புச் சென்றுள்ளார்.

மட்டக்களப்பு விசேட தளபதி கேணல் ரமேஷ் பொறுப்புக்களை கேணல் பானுவிடம் ஒப்படைத்துவிட்டு மீண்டும் இன்று வன்னி திரும்புகிறார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)

## ஆழக்கிடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளி, கிடங்கு தூர்ந்து மூடுவதைக் கண்டதும் கயிற்று ஏணியில் பாய்ந்து ஏறி ஒருவாறு குழிக்கு வெளியே தப்பி விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடியில் புதையுண்ட தொழிலாளியின் சடலத்தை உடனடியாக மீட்க முடியவில்லை.

குழாய்க் கிணற்றில் இருந்து வெளியேறிய பெருமளவு நீர் மண்ணுடன் சேர்ந்ததில் அந்தக் குழி பெரும் சகதியாகக் காணப்பட்டது. சகதியை வெளியேற்றி சடலத்தை வெளியே எடுப்பதற்கு கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கனரக வாகனத்தின் உதவியுடன் சகதியை அகற்றி சடலத்தை மீட்க முதலில் முயற்சிக்கப்பட்டது. எனினும், அது சாத்தியமாகாததை அடுத்து குழிக்குள் இருந்து மண்ணை அப்புறப்படுத்தும் பணியில் பொதுமக்களும் பொலீஸாரும் நேற்று இரவிரவாக ஈடுபட்டனர்.

அச்சுவேலி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.இரணசிங்க தலைமையிலான பொலீஸ் குழுவினர் மீட்பு வேலைகளில் உதவினர்.

குழிக்குள் பெருமளவு நீர் பெருகிக் கொண்டிருந்ததால் சடலத்தை மீட்பதில் தாமதம் ஏற்பட்டது.

சடலத்தை மீட்கும் பணி இன்று காலை தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-11)



நெதர்லாந்து தூதுவர் யாழ்.அரச அதிபருடன் கலந்துரையாடுகிறார். (படம்: புஸ்பா)

# சூட்டுக்காயங்களுடன் இரு சடலங்கள் மகாஓயா காட்டுப் பகுதியில் மீட்பு!

## புல்லுமலையில் பலியான கருணா குழுவினருடையவையா?

மட்டக்களப்பு, செங்கலடி - பதுளை வீதியிலுள்ள மகாஓயா காட்டுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இரண்டு சடலங்கள நேற்றுமுன்தினம் இரவு பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து புதைக்கப்பட்ட நிலையில் இந்தச் சடலங்கள் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக மகாஓயா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு புல்லுமலையிலுள்ள விடுதலைப் புலிகளின் காவல் நிலை மீதான தாக்குதல் சம்பவத்தின்போது விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் கொல்லப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்தவர்களின் சடலங்களாக இவை இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இதேவேளை -

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் குழு ஒன்று இந்தப் பகுதிக்கு நேற்று சென்று விசாரணைகளை நடத்தியது.

சம்பவம் குறித்து பொதுமக்களிடம் அக் குழு விசாரணைகளை நடத்தியது.

இதற்கிடையில் -

புல்லுமலைத் தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு ஒருவார காலம் முன்பிருந்தே ஆயுதக்குழு ஒன்றின் நடமாட்டம் அப்பகுதியில் காணப்பட்டது என்றும் -

சம்பவம் நடந்த பின்னர் அக்குழுவின் நடமாட்டத்தைக் காணமுடியவில்லை என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ-3)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(தொண்டாவின் கட்சியின்) இரு உறுப்பினர்கள் அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர். தொண்டமான் வலியுறுத்தும் கருத்தையே நாமும் வலியுறுத்தினோம்.

பேச்சுக்களை ஆரம்பித்துப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணுங்கள், ஐ.தே.க. அதற்கு பூரண ஆதரவை நல்கும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பகிரங்கமாகவே கோரியிருந்தோம்.

இந்த விடயத்தில் அவரின் கரத்தைப் பலப்படுத்த நாம் தயாராகவே இருக்கிறோம்.

இந்த அடிப்படையில் இ.தொ.கா., அரசுக்கு கொடுத்த நிபந்தனையில்லாத ஆதரவை நாம் வரவேற்கின்றோம். இ.தொ.காங்கிரஸ் எப்போதும் ஐ.தே.கவுடனேயே இருக்கும். எமது சம்மதத்துடனேயே அவர்கள் அரசுக்கு ஆதரவு நல்கியுள்ளனர். நாடாளுமன்றில் ஆட்டம் கண்டுள்ள அரசு இ.தொ.காவின் ஆதரவுடன் தனது ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு அந்நடவடிக்கை ஊடாக மேலும் அதிகரித்துள்ளது என்றே நாம் கருதுகிறோம் - என்றார் அவர். (ஐ-க-3)

## இ.தொ.கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு நல்க முன்வந்துள்ள இ.தொ.கா. கூட்டமைப்பின் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டாக வேண்டும் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருந்தார். அதை மறுத்துரைக்கும் வகையில் கருத்து வெளியிட்டார் வீ.புத்திரசிகாமணி.

1977இலிருந்து இ.தொ.கா. பல்வேறு அரசுகளில் இடம்பெற்றுவந்துள்ளது. ஆனால், அப்போதுமுதல் இப்போதுவரை அது தனது தனித்துவ நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்கவில்லை - என்றார் புத்திரசிகாமணி எம்.பி. (ஐ-க)

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை நடைபெறவுள்ள தேர்த்திருவிழாவின் போதும் இதுபோன்றே ஆலயச் சூழலில் பெரும் வாகன நெரிசலும் போக்குவரத்து நெருக்கடியும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலயத்துக்கு வாகனங்களில் வருவோர் ஆலயச் சூழலுக்கு தொலைவாக அவற்றைத் தரிக்கவிட்டு போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க உதவவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)


Computer courses
Diploma in Computerized Accounting
Diploma in AUTOCAD
Diploma in Internet E-mail
Diploma in Microsoft office 2003
Diploma in Desktop Publishing
Diploma in Computer Hardware Engineering
Note:-பல்கலைக்கழகத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தனிப் பிரிவு ஆரம்பிக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170
ஆரம்பம் 18.09.2004



SKY Computer (Pvt) Ltd.
No.89, Kandy Road, Chundikuli, Jaffna.
Ms.Office (3 மாதம்) 1500/=
Ms.Word (1 மாதம்) 500/=
Ms.Excel (1 மாதம்) 500/=
Ms.Access (1 மாதம்) 500/=
Ms.Power Point (1 மாதம்) 500/=
★ புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.
★ இலகுவான தவணைக்கட்டண முறை.
Today You Learn Tomorrow You Lead.
T.P.No:4590325 (சி-37581)



ICTAD இல் ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்ய விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் சனி, ஞாயிறு கிழமைகளில் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: சி.மணி
பொற்பதி றோட்,
பிள்ளையார் கோயில் மேற்கு வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P.: - 222 7027 (36331)



COMPUTER COURSES
New Batches Start Batch 1 : 18/09/2004 Batch 2 : 20/09/2004 at 10.00 a.m
Diploma in MS Office
Diploma in Desk Top Publishing
Diploma in Hardware Technology
Diploma in Internet Technology
Diploma in Java Programming
Diploma in Eng. Drawing & AutoCAD
Diploma in Visual C Programming
Diploma in Visual Basic Programming
விசேட கட்டணச் சலுகையில் ...
உயர் கல்வி கற்கும், கற்க இருக்கும் (பல்கலைக்கழக, தொழில் நுட்பக்கல்லூரி) மாணவர்களுக்காகவே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற விசேட பிரிவு இது என்பது குறிப்பித்தக்கது.
கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.
INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
An *Edexcel* Approved Training Centre
IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.